திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சிக்கான உரின இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி 2019-2022 மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமத்திற்கு விடும் வகைக்கு மேலப்பாளையம் மண்டல உரிம இனங்களுக்கு 31.01.2019ம் தேதியில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு, தினத்தந்தி மற்றும் தினமலர் நாளிதழில்களில் 11.01.2019ம் தேதியில் விளம்பரம் செய்யபப்பட்டது. மேலும் மாநகராட்சியில் நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளிலும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இனம் எண். 1:

மேலப்பாளையம் மண்டல அலுவலக பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் அல்லது மாநகராட்சி நிர்ணயிக்கும் இடத்தில் அறுக்கப்படும் மாடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கடந்த 31.01.2019 அன்று நடைபெற்ற ஏல/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளில் கீழ்காணும் விபரப்படி ஏலத்தில் ஒருவர் கலந்து கொண்டார். ஒப்பநதப்புள்ளி ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

ஏல விபரம்: (குறும தொகை : ரூ.670000/-)

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏல கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமதி.ஆசியா,<br>க/பெ.அப்துல் அஜீஸ்<br>160/254 பெரிய கொத்பா பள்ளி தென் கீழத்தெரு,<br>மேலப்பாளையம். | வைப்புத்தொகை ரூ168000<br>செ.சீ.எண். 20697 நாள்.22-1-19<br>கூடுதல் வைப்புத்தொகை<br>ரூ.168000 செ.சீ.எண்.20698<br>நாள். 22-1-2019 | ரூ.670000/- |

மேற்காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டல அலுவலக பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் அல்லது மாநகராட்சி நிர்ணயிக்கும் இடத்தில் அறுக்கப்படும் மாடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலத்தில் கலந்து கொண்ட நபர் திருமதி. ஆசியா பீவி என்பவர் கேட்டுள்ள ஏலக்கேள்வி தொகைரூ.6,75,000/- (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) குறும தொகையை விட ரூ.5000/- கூடுதலாக இருப்பதால், அதனை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு

இனம் எண்.2 மேலப்பாளையம் மண்டல அலுவலக பகுதிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் பிரதான வாயிலில் 6 தொலைக்காட்சி பெட்டிகளும் நான்கு நடைமேடைகளில் நடைமேடை ஒன்றில் 3 தொலைகாட்சி பெட்டிகள் வீதம் 12 தொலைகாட்சி பெட்டிகள் அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம்.

ஏல விபரம்: (குறும தொகை : ரூ.551000/-)

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏல கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.பாமதன்ராஜா,<br>தபெ.பாலசப்பிரமணியன்<br>பிளாட் எண்.365 முதல் தளம்<br>எல்ஐஜி காலனி,<br>அண்ணா நகர், மதுரை | வைப்பு தொகை ரூ.138000 டி.டி.எண்.179820 பெடரல் பாங்க். மதுரை,<br>கூடுதல் வைப்பு தொகை ரூ.138000 டிடி.எண்.179819 பெடரல் பாங்க் மதுரை நாள்: 24.1.2019 | ரூ.600000/- |

ஒப்பந்தப்புள்ளி விபரம் :

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏல கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 2 | திரு.பாலசுப்பிரமணியன்,<br>பிளாட் எண்.626 எல்ஜஜி காலனி அண்ணா நகர்,<br>மதுரை | வைப்பு தொகை ரூ.138000 டி.டி.எண்.225127 கரூர் வைஸ்யா வங்கி மதுரை, கூடுதல் வைப்பு தொகை ரூ.138000 டி.டி.எண்.225127 கரூர் வைஸ்யா வங்கி மதுரை, நாள்: 24.1.2019. | ரூ.625000/- |

மேற்காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டல அலுவலக பகுதிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் பிரதான வாயிலில் 6 தொலைக்காட்சி பெட்டிகளும் நான்கு நடைமேடைகளில் நடைமேடை ஒன்றில் 3 தொலைகாட்சி பெட்டிகள் வீதம் 12 தொலைகாட்சி பெட்டிகள் அமைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற ஒரே ஒரு ஏல கேள்வி மற்றும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு நோக்கியதில் திரு.எம்.பாலசுப்பிரமணியன் என்பவர் கொடுத்துள்ள ரூ.6,25,000/-(ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) க்கான ஒப்பந்தபுள்ளியானது குறும தொகையை விட ரூ.74000/- கூடுதலாக இருப்பதால், அதனை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு

அலுவலக குறிப்பு :

**I)** மேலும் பொருளில் காணும் விபரப்படி இனம் எண்.I ல் காணும் மேலப்பாளையம் மண்டல அலுவலக பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் அல்லது மாநகராட்சி நிர்ணயிக்கும் இடத்தில் அறுக்கப்படும் மாடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர் கேள்வியாக ரூ.6,75,000/- (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள திருமதி.ஆசியா பீவி என்பவரின் ஏலக்கேள்வியை மாமன்றம் ஒப்பு கொள்ளலாம்,

**II)** பொருளில் காணும் விபரப்படி, இனம் எண் II – ல் காணும் மேலப்பாளையம் மண்டல அலுவலக பகுதிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் பிரதான வாயிலில் 6 தொலைக்காட்சி பெட்டிகளும் நான்கு நடைமேடைகளில் நடைமேடை ஒன்றில் 3 தொலைகாட்சி பெட்டிகள் வீதம் 12 தொலைகாட்சி பெட்டிகள் அமைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு உயர் கேள்வியாக .ரூ.6,25,000/- /-(ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.பாலசுப்பிரமணியன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஒப்பு கொள்ளலாம்.

தீர்மானம் எண் 211

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(அ1-10434-2018 மே.பா.)

---

2) திருநெல்வேலி மாநகராட்சிக்கான உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி 2019-2022 மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமத்திற்கு விடும் வகைக்கு மேலப்பாளையம் மண்டல உரிம இனங்களுக்கு 14-2-2019 அன்று மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு, மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளில் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இனம் எண். 4 மேலப்பாளையம் மண்டலம் மீன் சந்தையில் உள்ள 8 மீன் கடைகளில் தரையில் அமர்ந்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 15-2-2019 அன்று அன்று நடைபெற்ற மறு ஏல /ஒப்பந்தப்புள்ளி விபரம் கிழ்கண்டவாறு உள்ளது.

கடை எண்.2 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-

ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-)

| வ. எண். | ஒப்பந்தபுள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ஏ.சாகுல்ஹமீது<br>56/2 ஆசூரா மேலத்தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ15000 செ.சீ.எண்.21442<br>நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்<br>தொகை ரூ.15000 செ.சீ.எண்.21443<br>நாள்.30-1-2019 | ரூ.55555 |
| 2 | திரு.எம்.ஆதம்<br>26 காட்டு செக்க 2வது தெரு<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21438<br>நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்<br>தொகை ரூ.5000 செ.சீ.எண்.21439<br>நாள்.30-1-2019 | ரூ.19000 |
| 3 | திரு.எஸ்.எஸ்.முகமது ஹனீபா<br>55 பெரிய கொத்பா பள்ளிவாசல் தெரு. மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21095<br>நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்<br>தொகை ரூ.5000 செ.சீ.எண்.21096<br>நாள்.30-1-2019 | ரூ.58588 |
| 4 | திரு.என்.மலையாண்டி<br>14 வடக்கு அம்மன் கோவில் தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21521<br>நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்<br>தொகை ரூ.5000 செ.சீ.எண்.21522<br>நாள்.30-1-2019 | ரூ.22000 |

ஒப்பந்தபுள்ளியில் நான்கு நபர்கள் கலந்து கொண்டனர். அதில், திரு.சாகுல்ஹமீது என்பவர் ரூ.55555/-க்கும், திரு.எம்.ஆதம் என்பவர் ரூ.19000/-க்கும், திரு.எஸ்.எஸ்.முகமது ஹனீபா என்பவர் ரூ.58588/-க்கும் மற்றும் திரு.மலையாண்டி என்பவர் ரூ.22000/-க்கும் ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தபுள்ளிகளை ஒப்பிட்டு நோக்கியதில், கூடுதல் ஒப்பந்தபுள்ளி தொகையாக திரு.எஸ்.எஸ்.முகமது ஹனிபா என்பவர் ரூ.58,588/- எனக்குறிப்பிட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.40,088/- கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திரு.எஸ்.எஸ்.ஹனிபர் என்பவருக்கு அன்னாரின் ஒப்பந்தபுள்ளி கேள்வி தொகையான ரூ.58,588/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு

கடை எண்.3 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.மைதீன்பாட்சா<br>61 ஹாமீம்பரம்<br>மேலப்பாளைம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21490 நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21491 நாள்.30-1-2019 | ரூ.52000 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-

| வ. எண். | ஓப்பந்தபுள்ளிதாரா் பெயா் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் | ஓப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ஆா்.ஆறுமுகம்<br>6 வள்ளுவா் தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21482 நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21483 நாள்.30-1-2019 | ஓ.புள்ளி தகுதியில்லை. |
| 2 | திரு.ஏ.சாகுல்ஹமீது<br>56/2 ஆசூரா மேலத்தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ15000 செ.சீ.எண்.21442 நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.15000 செ.சீ.எண்.21443 நாள்.30-1-2019 | ரூ.54321 |

மீன் கடை எண்.3க்கான ஏலத்தில் ஒருவா் மட்டும் கலந்து கொண்டு, ஏலக்கேள்வியாக ரூ.52000/- கேட்டுள்ளாா். மேற்படி கடைக்கான ஒப்பந்தபுள்ளியில் இரண்டு நபா்கள் கலந்து கொண்டதில், ஒப்பந்தபுள்ளி தொகையாக திரு.ஏ.சாகுல் ஹமீது என்பவா் ரூ.54321/- எனக்குறிப்பிட்டுள்ளாா். மேற்படி தொகையானது நிா்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.35821/- கூடுதலாக கேட்டுள்ளாா்.

எனவே திரு.ஏ சாகுல் ஹமீது என்பவருக்கு அன்னாரின் ஒப்பந்தபுள்ளி கேள்வி தொகையான ரூ.54,321/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பாா்வைக்கு மற்றும் முடிவிற்கு.

கடை எண்.5 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-)

ஏலத்தில் ஒருவா் மட்டும் கலந்து கொண்டாா்.

| வ. எண். | ஏலதாரா் பெயா் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.மைதீன்பாட்சா<br>61 ஹாமீம்பரம்<br>மேலப்பாளைம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.23183 நாள். 13.2.2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21182 நாள்.13.2.2019 | ரூ.66500 |

ஓப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-

| வ. எண். | ஓப்பந்தபுள்ளிதாரா் பெயா் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் | ஓப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.வீ.ஆறுமுகம்,<br>118 சாந்தமூா்த்தி தெரு,<br>குறிச்சி மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21484 நாள்.30.1.2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21485 நாள்.30.1.2019 | ரூ.19000 |
| 2 | திரு.ஏ.சாகுல்ஹமீது<br>56/2 ஆசூரா மேலத்தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ15000 செ.சீ.எண்.21442 நாள். 30-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.15000 செ.சீ.எண்.21443 நாள்.30-1-2019 | ரூ.44444 |

மீன் கடை எண். 5க்கான ஏலத்தில் ஒருவா் மட்டும் கலந்து கொண்டாா். அன்னாா் ஏலக்கேள்வியாக ரூ.66500/-க்கு கேட்டுள்ளாா். மேற்படி கடைக்கான ஒப்பந்தபுள்ளியில் இருவா் மட்டும் கலந்து கொண்டு ஒப்பந்தபுள்ளி தொகையாக முறையே ரூ.19000/- மற்றும் ரூ.44444/- எனக்குறிப்பிட்டுள்ளனா். மேற்படி கடைக்கான ஏலத்தில் கலந்து கொண்டவரின் ஏலக்கேள்வி தொகையான ரூ.66500/- நிா்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.48000/- கூடுதலாக கேட்டுள்ளாா்.

எனவே திரு.எம்.மைதீன்பாட்சா என்பவருக்கு அன்னாரின் ஏலக்கேள்வி தொகையான ரூ.66,500/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பாா்வைக்கு மற்றும் முடிவிற்கு

கடை எண்.6 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-)

ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-

| வ. எண். | ஒப்பந்தபுள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது சாலி 11 காட்டு செக்கு 2வது தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21440 நாள்.30.1.2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21441 நாள்.30.1.2019 | ரூ.19000 |
| 2 | திரு.வேல்முருகன், 27 பெரிய மருதுபாண்டியர் தெரு, கருங்குளம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21097 நாள்.25.1.2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21098 நாள்.25.1.2019 | ரூ.46466 |

மீன் கடை எண்.6க்கான ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி கடைக்கான ஒப்பந்தபுள்ளியில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டு ஒப்பந்தபுள்ளி தொகையாக திரு.வேல்முருகன் என்பவர் ரூ.46,466/-ஐக் குறிப்பிட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.27,966/- கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திரு.வேல்முருகன் என்பவருக்கு அன்னாரின் ஒப்பந்தபுள்ளி கேள்வி தொகையான ரூ.46,466/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு
.

கடை எண்.8 ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.மைதீன்பாட்சா 61 ஹாமீம்பரம் மேலப்பாளைம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.23184 நாள். 13.2.2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21185 நாள்.13.2.2019 | ரூ.71500 |

ஒப்பந்தபுள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.18500/-

| வ. எண். | ஒப்பந்தபுள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத்தொகை விபரம் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது கனி 93எப்1 ஹாமீம்புரம் தெற்கு தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21522 நாள். 30.1.2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21521 நாள்.30.1.2019 | ரூ.19000 |
| 2 | திரு.ஜெய்னுல் ஆப்தீன் 21 வடக்கு தைக்கா தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ5000 செ.சீ.எண்.21299 நாள். 29-1-2019 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.5000 செ.சீ.எண்.21298 நாள்.29-1-2019 | ரூ.55555 |

மீன் கடை எண்.8க்கான ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். அன்னார் தனது ஏலக்கேள்வியாக ரூ.71500/-க்கு கேட்டுள்ளார். மேற்படி கடைக்கான ஒப்பந்தபுள்ளியில் மூன்று நபர்கள் கலந்து கொண்டு ஒப்பந்தபுள்ளி தொகையாக முறையே ரூ.19000/-, ரூ.55555/- மற்றும் ரூ.61000/- எனக்குறிப்பிட்டுள்ளனர். மேற்படி தொகையை காட்டிலும் ஏலத்தில் கலந்து கொண்ட திரு.எம்.மைதீன்பாட்சா என்பவரின் ஏலக்கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.53,500/- கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திரு.எம்.மைதீன்பாட்சா என்பவருக்கு அன்னாரின் ஏலக்கேள்வி தொகையான ரூ.71,500/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு

அலுவலக குறிப்பு :

கடை எண்.2 ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் நான்கு பேர் கலந்து கொண்டதில் திரு.எஸ்.எஸ்.முகமது ஹனிபா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.58588/- யானது குறும தொகையை விட ரூ.40088/- கூடுதலாக இருப்பதால், திரு.எஸ்.எஸ்.முகம்மது ஹனிபா என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.58588/- (ஐம்பத்தி எட்டாயிரத்து ஐநூற்றி எண்பத்தி எட்டு மட்டும்) ஐ மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

கடை எண்.3 ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டு ரூ.52000/-க்கு ஏலம் கேட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளியில் இருவர் கலந்து கொண்டதில் கூடுதல் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.54321/- கொடுத்துள்ள திரு.சாகுல்ஹமீது என்பவரின் ஒப்பந்தபுள்ளியானது குறும தொகையை விட ரூ.35821/- கூடுதலாக இருப்பதால், திரு.சாகுல்ஹமீது என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.54321/- (ஐம்பத்தி நான்காயிரத்து முன்னூற்றி இருபத்தி ஒன்று மட்டும்) ஐ மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

கடை எண்.5 ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டு ரூ.66500க்கு ஏலம் கேட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட இருவரைக்காட்டிலும், ஏலம் கேட்டுள்ள திரு.மைதீன்பாட்சா என்பவர் ஏலத்தொகை ரூ.66500க்கு யானது குறும தொகையை விட ரூ.48000/- கூடுதலாக உள்ளது. எனவே திரு.மைதீன்பாட்சா என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.66500/- (ரூபாய் அறுபத்தி ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) ஐ மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

கடை எண்.6 ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை ஒப்பந்தப்புள்ளியில் இருவர் கலந்து கொண்டனர். அதில் திரு.வேல்முருகன் என்பவர் கேட்டுள்ள ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.46466/- யானது குறும தொகையை விட ரூ.27966/- கூடுதலாக உள்ளதால், எனவே திரு.வேல்முருகன் என்பவரின் ஒப்பந்தபுள்ளி ரூ.46466/- (நாற்பத்தி ஆராயிரத்து நானூற்றி அறுபத்தி ஆறு மட்டும்) ஐ மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

கடை எண்.8 ஏலத்தில் ஒருவர் கலந்து கொண்டு ஏலக்கேள்வியாக ரூ.71500/-க்கு ஏலம் கேட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளியில் மூவர் கலந்து கொண்டணர். இதில் திரு.மைதீன்பாட்சா என்பவர் கேட்டுள்ள ஏலத்தொகை ரூ.71500/- யானது குறும தொகையை விட ரூ.53000/- கூடுதலாக இருப்பதால், திரு.மைதீன்பாட்சா என்பவரின் ஏலத்தொகை ரூ.71500/- (எழுபத்தி ஒன்றாயிரத்து ஐநூறு மட்டும்) ஐ மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் 212

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(அ1-10434-2018 மே.பா.)

---

3) திருநெல்வேலி மாநகராட்சிக்கான உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி 2019-2022 மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமத்திற்கு விடும் வகைக்கு மேலப்பாளையம் மண்டல உரிம இனங்களுக்கு 22-02.2019 அன்று மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு, மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளில் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இனம் எண்.3 மேலப்பாளையம் மண்டலம் மீன் சந்தை மற்றும் அதை சுற்றியும் வார்டு அலுவலக எல்கைக்குள்ளும் விற்பனைக்கு வரும் மீன்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வதூல் செய்யும் உரிமம் மற்றும் தரகு வியாபாரம் செய்யும் உரிமம் மீன் சந்தைக்குள் தரையில் அமர்ந்து வியாபாரம் செய்பவர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 22-2-2019 அன்று நடைபெற்ற மறு ஏல /ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளில் கீழ்காணும் விபரப்படி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

ஏல விபரம்: (குறும தொகை : ரூ.6,00,000/-)

ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

| வ. எண். | ஏலதாரா் பெயா் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமதி.சிராஜ்நிஷா 168.'.254 பெரிய கொத்பா பள்ளி தெற்கு கீழத்தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.150000 செ.சீ.எண்.21379 நாள்.29.1.19 மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.150000/- செ.சீ.எண்.21380 நாள். 29.1.19 | ரூ.10,17,777/- |

ஒப்பந்தப்புள்ளி விபரம் : ஒருவா் மட்டும் கலந்து கொண்டார்

| வ. எண். | ஓப்பந்தப்புள்ளிதாரா் பெயா் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஓப்பந்தபுள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.என்.மலையாண்டி, 14 வடக்கு அம்மன் கோவில் தெரு, மேலப்பாளையம் | வைப்புத்தொகை செலான் எண்.21474 நாள்.30-01-2019 ரூ.150000/- மற்றும் கூடுதல் வைப்புத்தொகை செலான் எண்.21475 நாள்.30-01-2019 ரூ.150000/- | ரூ.6,60,000/- |

மேற்காணும் உரிமம் தொடா்பாக உரிமத்திற்கு வரப்பெற்ற ஒரே ஒரு ஏலக்கேள்வி மற்றும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு நோக்கியதில் திருமதி.எம்.சிராஜ்நிஷா என்பவரின் ஏலக்கேள்வி ரூ.10,17,777/- (ரூபாய் பத்து இலட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்றி எழுபத்து ஏழு மட்டும்) குறும தொகையை விட ரூ.4,17,777/- கூடுதலாக இருப்பதால், திருமதி.எம்.சிராஜ்நிஷா என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.10,17,777/- ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு.

அலுவலக குறிப்பு :

**I)** பொருளில் காணும் விபரப்படி, இனம் எண் III – ல் காணும் மேலப்பாளையம் மண்டலம் மீன் சந்தை மற்றும் அதை சுற்றியும் வார்டு அலுவலக எல்கைக்குள்ளும் விற்பனைக்கு வரும் மீன்களுக்கு நிா்ணயிக்கப்பட்ட கட்டணம் வதல் செய்யும் உரிமம் மற்றும் தரகு வியாபாரம் செய்யும் உரிமம் மீன் சந்தைக்குள் தரையில் அமா்ந்து வியாபாரம் செய்பவா்களிடம் நிா்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற ஒரேஒரு ஏலக்கேள்வி மற்றும் ஒரேஒரு ஒப்பந்தப்புள்ளி ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு நோக்கியதில் திருமதி.எம்.சிராஜ்நிஷா என்பவரின் ஏலக்கேள்வி உயா் கேள்வியாக ரூ.10,17,777/- (ரூபாய் பத்து இலட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்றி எழுபத்து ஏழு மட்டும்)க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள திருமதி.சிராஜ்நிஷா என்பவரின் ஏலக்கேள்வியை மாமன்றம் ஒப்பு கொள்ளலாம்.

தீா்மானம் எண் 213

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(அ1-10434-2018 மே.பா.)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டலங்களிலும் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்காக பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s.George Engg. Enterprises நிறுவனத்தால் 27.02.2019ல் சமா்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எண். | பணி விபரம் | 5% RM | Main Office Lapsed பதிவேடு |
|---|---|---|---|
| 1 | S/D of double leaf gate vehicle & AC sheet arrangements to Tvl. Corpn | 11,226 | 2014-15 Pno.39 |

| | | | |
|---|---|---|---|
| 2 | Renovation of building for dog pre-operation room in Sripuram Vertnary Hospital | 10,393 | 2014-15 Pno47 |
| 3 | Shed for infront of Kallanai Girls Hr.Sec. School | 49,900 | 2014-15 Pno.23 |
| 4 | Cycle Shed of Kallanai Hr. Sec School | 49,750 | 2014-15 Pno.23 |
| 5 | S/D of ms furniture to lalugapuram school & Kallanai school | 16,868 | 2014-15 Pno.25 |
| 6 | Road Signage Boards of 13mts in Main entrance of NBS | 46,638 | 2014-15 Pno.34 |
| 7 | Road Signage Boards of 13mts in North entrance of NBS | 46,638 | 2014-15 Pno.34 |
| 8 | Road Signage Boards of 13mts in entrance of NBS south | 80,156 | 2014-15 Pno.34 |
| | Total | 3,11,569 | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் 5% RM தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளபடியால், நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(iii)-ன்படி 5% RM தொகை ரூ.3,11,569/-மட்டும் M/s.George Engg. Enterprises நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 214

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண். 186/13-14)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்காக செலுத்திய பின்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s.NHA Associates நிறுவனத்தால் 11.2.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண். | பணி விபரம் | தொகை | MPM Zone Lapsed பதிவேடு |
|---|---|---|---|
| 1 | Pro' BT surface at T.nagar 15th & 16th South street in wno.19 | 21,734 | 2013-14 Pno.7 |
| 2 | Pro' BT surface at T.Nagar 9th & 10th Middle street wno.19 | 21,849 | 2013-14 Pno.7 |
| 3 | Pro' BT surface at Sokkanathar koil street wno.31 | 21,940 | 2013-14 Pno.4 |
| 4 | Pro' Bt surface at Periya Kothuba Pallivasal Keela street wno.32 | 18,163 | 2013-14 Pno.4 |
| 5 | Pro' BT surface at Asura East street wno.33 | 30,750 | 2013-14 Pno.8 |
| 6 | Pro' BT surface at Shanmugapuram 1 & VGP saran agar in wno.26 | 15,694 | 2013-14 Pno.5 |
| 7 | Pro' BT surface at Otchankulam Main road wno.26 | 17,090 | 2013-14 Pno.4 |
| 8 | Pro' BT surface at kurichi Pillayar koil street & Rajathi nagar wno.30 | 20,058 | 2013-14 Pno.8 |
| 9 | Pro' BT surface at Pillayar kovil street wno.30 | 30,112 | 2013-14 Pno.7 |
| 10 | Pro' BT surface at Udhaya Nagar in wno.27 | 27,028 | 2013-14 Pno.7 |
| | TOTAL | 2,24,418 | |

அலுவலகக் குறிப்பு

மேற்படி, பின்வைப்புத் தொகை மேலப்பாளையம் மண்டல வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது, தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளபடியால், நகராட்சி நடைமுறை நூல் விதி எண்.7(10)(i)(iii)-ன்படி மேற்படி பின்வைப்புத் தொகை ரூ.2,24,418/-மட்டும் M/s.NHA Associates நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 215

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மேலப்பாளையம் மண்டலம் ம.எண். 147/12-13)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்காக செலுத்திய பின்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s.NHA Associates நிறுவனத்தால் 11.02.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எண். | பணி விபரம் | தொகை (ரூ.) | MPM Zone Lapsed பதிவேடு |
|---|---|---|---|
| 1. | Pro’ BT surface at Thommai Michaelpuram in wno.28 | 19,300 | 2014-15 Pno.14 |
| 2. | Pro’ Bt surface at Bright colony Viswalakshmi nagar wno.28 | 43,670 | 2014-15 Pno.15 |
| 3. | Attending the patchwork at damaged BT surface at various places in wno.19, 26 to 29 area | 10,000 | 2014-15 Pno.20 |
| | TOTAL | 72,970 | |

அலுவலகக் குறிப்பு

மேற்படி, பின்வைப்புத் தொகை மேலப்பாளையம் மண்டல வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது, தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளபடியால், நகராட்சி நடைமுறை நூல் விதி எண்.7(10)(i)(iii)-ன்படி பின்வைப்புத் தொகை ரூ.72,970/- மட்டும் M/s.NHA Associates நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 216

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மேலப்பாளையம் மண்டலம் ம.எண். 147/12-13)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்காக செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s. NHA Associates நிறுவனத்தால் 11.2.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பணி விபரம் | தொகை | MPM Zone Lapsed பதிவேடு |
|---|---|---|---|
| 1 | Pro’ BT surface at T.Nagar 9th & 10th Middle street wno.19 | 20,000 | 2013-14 Pno.4 |
| 2 | Pro’ BT surface at T.nagar 15th & 16th South street in wno.19 | 20,000 | 2013-14 Pno.7 |
| 3 | BT wno.19 | 18,250 | 2013-14 Pno.7 |
| 4 | Pro’ BT surface at Sokkanathar koil street | 20,000 | 2013-14 Pno.7 |

| | | | |
|---|---|---|---|
| | wno.31 | | |
| 5 | Pro' Bt surface at Periya Kothuba Pallivasal Keela street wno.32 | 16,600 | 2013-14 Pno.4 |
| 6 | Pro' BT surface at Otchankulam Main road wno.26 | 16,000 | 2013-14 Pno.4 |
| 7 | Pro' BT surface at Shanmugapuram 1 & VGP saran agar in wno.26 | 14,750 | 2013-14 Pno.5 |
| 8 | Pro' BT surface at Pillayar Street wno.30 | 30,000 | 2013-14 Pno.7 |
| 9 | Pro' BT surface at kurichi Pillayar koil street & Rajathi nagar wno.30 | 18,500 | 2013-14 Pno.9 |
| 10 | Pro' Bt surfave at Udhaya Nagar in wno.27 | 25,000 | 2013-14 Pno.7 |
| | TOTAL | 1,99,100 | |

அலுவலகக் குறிப்பு

மேற்படி, முன்வைப்புத் தொகை மேலப்பாளையம் மண்டல வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது, தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளபடியால், நகராட்சி நடைமுறை நூல் விதி எண்.7(10)(i)(iii)-ன்படி முன்வைப்புத் தொகை ரூ.1,99,100/- மட்டும் M/s. NHA Associates நிறுவனத்திற்கு திரும்ப வழுங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 217

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மேலப்பாளையம் மண்டலம் ம.எண். 104/12-13)

---

8) திருநெல்வேலி மாநகராட்சியில் பொதுநிதியின் கீழ், தச்சநல்லூர் மண்டலம் பாலபாக்யாநகர் பாதாள சாக்கடை நீரேற்றும் நிலையத்தில் 200 எச்.பி. திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார் (Submersible Centrifugal Sewage non-clog) ஒன்று விநியோகம் செய்து பொருத்தும் பணி செய்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.136 நாள் 11.12.2018-ம் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 41/2018-19 ன் படி, தினசூரியன் தமிழ் நாளிதழில் 06.02.2019 –ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 25.02.2019-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் திரு. எஸ்.செல்வம் மற்றும் மெசர்ஸ்.சிவபாலகுரு கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ். சிவபாலகுரு கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் நிறுவனத்தாரின் ஒப்பநதப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்.செல்வம் ஒப்பந்தக்காரரின் ஒப்பநதப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தச்சநல்லூர் மண்டலம் பாலபாக்யாநகர் பாதாள சாக்கடை நீரேற்றும் நிலையத்தில் 200 எச்.பி. திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார் (Submersible Centrifugal Sewage non-clog) ஒன்று விநியோகம் செய்து பொருத்தும் பணி செய்தல் | Rs.21,70,691/- | Rs.21,70,000/- மதிப்பீட்டை விட 0.03% குறைவு | Rs.21,60,000/- மதிப்பீட்டை விட 0.12% குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.செல்வம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவாக உள்ளது. எனவே, 28.02..2019-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.செல்வம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.21,60,000/- மதிப்பீட்டை விட 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ளலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சியில் பொதுநிதியின் கீழ், தச்சநல்லூர் மண்டலம் பாலபாக்யாநகர் பாதாள சாக்கடை நீரேற்றும் நிலையத்தில் 200 எச்.பி. திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார் (Submersible Centrifugal Sewage non-clog) ஒன்று விநியோகம் செய்து பொருத்தும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும் மேற்படி பணியினை அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், 28.02.2019 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.செல்வம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.21,60,000/- மதிப்பீட்டை விட 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 218

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மதிப்பீடு எண்.55/2018-19-மை.அ)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட மகாராஜநகரில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2019-2022ம் ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 30-01-2019 அன்று பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அதில் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. பொது ஏலத்தில் திரு.ஆர். அருளப்பன் என்பவர் மட்டும் கலந்துகொண்டு ஏலக்கேள்வித்தொகை ரூ.440000/-க்கு கேட்டிருந்தார். ஒருவர் மட்டுமே கலந்துகொண்டமையால் ஆணையாளர் உத்தரவுப்படி ஏலம் ரத்துசெய்யப்பட்டு மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கடந்த 27-02-2019 அன்று நடைபெற்றது. மறுஏலத்தில் இருவர் கலந்துகொண்டனர். ஒப்பந்தப்புள்ளியில் திரு. மகாராஜேந்திரன் என்பவர் கலந்துகொண்டு ரூ.5,25,000/-க்கு (ரூபாய் ஐந்து லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) உச்ச கேள்வி கேட்டுள்ளார். இத்தொகை உச்சகேள்வியாக இருப்பதாலும், மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ.418000/-க்கு கூடுதலாக உள்ளபடியால், இவ்வினத்தினை திரு.ஏ.மகாராஜேந்திரன் என்பவருக்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சிக்கு சொந்தமான உரிம இனமான மகாராஜநகரில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்திற்கு, அரசாணை எண் 78 ந.நி.(ம)கு.வ.துறை நாள் 25-05-2009ன்படி, 2019ம் ஆண்டு ஏப்ரல்-1ம் தேதி முதல் அல்லது ஒப்படைக்கும் நாளிலிருந்து 2022ம் ஆண்டு மார்ச்-31 முடிய காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு 27-02-2019ல் மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. பொது எலத்தில் இருவரும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொண்டனர். பொது ஏலத்தில் கலந்து கொண்ட திரு.ஆர்.அருளப்பன் என்பவர் ரூ.515000/-க்கும், மற்றொருவரான திரு. ஏ. வீரமணிசங்கர் என்பவர் ரூ.510000/-க்கும் ஏலக்கேள்வி கேட்டனர். பின்னர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.ஏ.மகாராஜேந்திரன் என்பவர் ரூ.525000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) கேள்வி கேட்டுள்ளார். எனவே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட திரு. ஏ.மகாராஜேந்திரன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட தொகை ரூ.525000/- அதிகமாக இருப்பதாலும், குறுமத்தொகையை விட கூடுதலாக இருப்பதாலும் அன்னாருக்கு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி மூன்றாண்டு தொகுப்பு கால அளவிற்கு அனுபவித்துக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 219

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(அ1-6543-2018-பாளை)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம, வார்டு எண் 19, தாவீது ராஜா நகர், ராயல்காலனி, சங்கர்காலனி பகுதியை சார்ந்த பொது மக்கள் புதிய தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தரக்கேட்டுள்ள விண்ணப்பத்தின்படி, இப்பகுதியில் ஏற்கனவே அமைந்திருக்கும் 32 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 32 எண்ணம் 20 W LED விளக்கு பொருத்திடவும், சங்கர் காலனியில் புதிதாக ஒரு மின்கம்பம் அமைத்து அதில் ஒரு LED விளக்கு பொருத்திடவும், ஆக மொத்தம் 33 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான செலவு உத்தேசம் ரூ.3,20,000/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 32 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 32 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும், சங்கர் காலனி பகுதியில் புதிய ஒரு மின்கம்பம் அமைத்து அதில் 20 W LED விளக்கு பொருத்திடவும், ஆக மொத்தம் 33 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான செலவு மற்றும் விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,20,000/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 220

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ2-642-19-மே.பா.)

---

11) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள செலுத்திய EMD/ FSD தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்தத்தாரர் திரு.S.கண்ணன் அவர்களால் 22.11.2018 அன்று சமா்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விபரம் | 5% RM | பதிவேடு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மண்டல அலுவலகத்தில் ஆணையர் அலுவலகம் (ம) மீட்டிங் நடத்தும் அறை கட்டிடம் கட்டுதல் - EMD | 25,000 | Tirunelveli Ward Deposit Register 2005-06 Pno.19 |
| 2 | திருநெல்வேலி மண்டல அலுவலகத்தில் ஆணையர் அலுவலகம் (ம) மீட்டிங் நடத்தும் அறை கட்டிடம் கட்டுதல் - FSD | 20,045 | Main Office Lapsed 2008-09 Pno.2 |
| | மொத்தம் | 45,045 | |

அலுவலகக் குறிப்பு

மேற்படி, EMD/ FSD தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(iii)-

ன்படி EMD/FSD தொகை ரூ.45,045/-மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.எஸ்.கண்ணன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 221

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண். 343/04-06 திருநெல்வேலி மண்டலம்)

---

12) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகளுக்காக செலுத்திய பின்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு திரு.S.கண்ணன் அவர்களால் 26.11.2018 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| பணி விபரம் | EMD | FSD | பதிவேடு |
|---|---|---|---|
| வார்டு எண்.16 டாக்டர் அம்பேத்கார் காலணியில் துப்புரவு பணியாளர்களுக்கு அடுக்குமாடி மேல்பக்க குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணி | 2,00,000 | 2,00,000 | Main Office 2014-15 Pno.29 2013-14 vol-1 Pno.29 |

அலுவலகக் குறிப்பு

மேற்படி, EMD/ FSD தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளபடியால், நகராட்சி நடைமுறை நூல் விதி எண்.7(10)(i)(iii)-ன்படி பின்வைப்புத் தொகை ரூ.4,00,000/-மட்டும் திரு.எஸ்.கண்ணன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 222

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண். 124/14-15)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலங்களிலும் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்காக செலுத்திய EMD/FSD தொகையினை திரும்ப வழங்க கேட்டு திரு.டி.பாலசுப்பிரமணியன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | EMD | FSD | வைப்புத் தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | வா.எண்.43 தெற்கு மவுண்ட் தார் சாலை | 3750 | 3750 | TVL - 2011-12 Pno.13 |
| 2 | வா.எண்.42 வ.உ.சி தெரு தார் சாலை | 17000 | 17000 | TVL - 2011-12 Pno.9,11 |
| 3 | வா.எண்.43 ரயில்வே பீடர் ரோடு தார் சாலை | 0 | 20000 | TVL - 2012-13 Pno.9 |
| 4 | வா.எண்.41 சத்தியமூர்த்தி தெரு தார் சாலை | 0 | 9500 | TVL - 2012-13 Pno.11 |
| 5 | வா.எண்.44 ஆர்.ஆர்.கே நகர் தார் சாலை | 18250 | 0 | TVL - 2012-13 Pno.15 |
| 6 | திருநெல்வேலி மண்டலப் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 5300 | 5735 | TVL - 2013-14 Pno.7 |
| 7 | வா.எண்.41 கீழரத வீதி தார்சாலை | 5800 | 5800 | TVL - 2014-15 Pno.16 |
| 8 | வா.எண்.42 மேல ரத வீதி தார்சாலை | 5800 | 5800 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | வா.எண்.40 திட்ட சாலை அமைத்தல் | 70000 | 70000 | TVL - 2014-15 Pno.19 |
| 10 | வா.எண்.50 சரோஜினி தெரு தார்தளம் | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.24 |
| 11 | வா.எண்.42 பெருமாள் தெ.ரதவீதி தார்தளம் | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.24 |
| 12 | வா.எண்.43 வெள்ளந்தங்கி பிள்ளையார் கோவில் தெரு தார்தளம் | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.24 |
| 13 | வா.எண்.49 பேட்டை-பழையபேட்டை இணைப்பு சாலை தார்சாலை | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.24 |
| 14 | வா.எண்.41 கீழரத வீதி தார்சாலை | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.24 |
| 15 | வா.எண்.40 பார்வதி தியேட்டர் முதல் அருணகிரி தியேட்டர் வரை WMM தார்தளம் அமைத்தல் | 58000 | 58000 | TVL - 2015-16 Pno.24 |
| 16 | வா.எண்.50 டாக்டர் அம்பேத்கார் நகரில் கனரக வாகன நிறுத்துமிடத்தில் WMM சாலை அமைத்தல் | 4000 | 4000 | TVL - 2015-16 Pno.24 |
| 17 | வா.எண்.50 தென்காசி சாலை டாக்டர் அம்பேத்கார் நகரில் கனரக வாகன நிறுத்துமிடத்தில் WMM சாலை அமைத்தல் | 9750 | 9750 | TVL - 2015-16 Pno.25 |
| 18 | வா.எண்.53 ஜவஹர்லால் தெருவில் தார்தளம் | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.25 |
| 19 | வா.எண்.45 டாக்டர் அம்பேத்கார் தெருவில் தார்தளம் | 10000 | 10000 | TVL - 2015-16 Pno.25 |
| 20 | வா.எண்.42 நெல்லையப்பர் தெற்கு ரதவீதி கீழரதவீதி தார்சாலை | 9900 | 9900 | TVL - 2016-17 Pno.5 |
| 21 | வா.எண்.42 வடக்கு ரதவீதி மற்றும் சத்தியமூர்த்தி தெரு தார்சாலை | 9950 | 9950 | TVL - 2016-17 Pno.5 |
| | | 287500 | 299185 | |

| | |
|---|---|
| EMD | 287500 |
| FSD | 299185 |
| TOTAL | 586685 |

மேற்காணும் EMD/FSD தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)-ன்படி மாமன்ற அனுமதி பெற்று EMD/FSD தொகை ரூ.5,86,685/- மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 223

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மதிப்பீட்டு எண். 51/13-14)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்காக செலுத்திய EMD/FSD தொகையினை திரும்ப வழங்க கேட்டு திரு.டி.பாலசுப்பிரமணியன் அவர்களால் 27.2.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | EMD | FSD | Register |
|---|---|---|---|---|
| | 2010-11 | | | 2010-11 |
| 1 | வார்டு எண் 2 ஆர் எஸ் ஏ நகரில் தார்தளம் அமைத்தல் | 15000 | 15015 | Pno.17, 25 |
| 2 | வார்டு எண் 9, வண்ணார்பேட்டை பேராட்சி அம்மன் கோயில் சாலையில் தார்தளம் அமைத்தல். | 25000 | 0 | Pno.18 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண் 10 பரணி நகரில் சிறு பாலம் அமைத்தல் | 2300 | 2300 | Pno.23<br>Pno.3 |
| | 2011-12 | | | 2011-12 |
| 4 | வார்டு எண் 10 பரணி நகரில் தார்தளம் அமைத்தல் | 16400 | 16400 | Pno.3, 4 |
| 5 | வார்டு எண் 3, சிவன் கோவில் தெற்கு ரத வீதியில் தார்தளம் அமைத்தல் | 9200 | 0 | Pno.3 |
| 6 | வார்டு எண் 5, நாடார் தெரு பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 3000 | 0 | Pno.4 |
| | 2012-13 | | | |
| 7 | வார்டு எண் 6 , கணேசபுரம் பகுதியில் சிறு பாலம் அமைத்தல் | 11400 | | Pno.8 |
| 8 | வார்டு எண் 2, மேலக்கரையில் தார் தளம் அமைத்தல் | 3750 | | Pno.8 |
| 9 | வார்டு எண் 3, ஸ்ரீபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 20231 | | Pno.15 |
| | 2013-14 | | | |
| 10 | வார்டு எண்-1 செல்வவிக்னேஷ் நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 10000 | | Pno.18 |
| 11 | வார்டு எண் 10 இளங்கோ நகரில் தார்தளம்அமைத்தல் | 15000 | | Pno.18 |
| 12 | வார்டு எண் 2 கீழக்கரை தார்தளம் அமைத்தல் | 20000 | | Pno.18 |
| 13 | வார்டு எண் 3 உலகம்மன் கோயில் தெருவில் சிமென்ட் தளம் அமைத்தல் | 4000 | | Pno.19 |
| 14 | வார்டு எண் 10 ராஜா குடியிருப்பில் தார்தளம் அமைத்தல் | 13000 | | Pno.19 |
| 15 | வார்டு எண் 6 கைலாசபுரம் கீழத் தெருவில் தார்தளம் அமைத்தல் | 20000 | | Pno.21 |
| 16 | வார்டு எண் 7 சிவபுரம் பகுதியில் கழிவுநீர் ஓடை அமைத்தல் | 10000 | | Pno.21 |
| 17 | வார்டு எண் 8 சாலைத் தெருவில் தார்தளம் அமைத்தல் | 17000 | | Pno.22 |
| 18 | வார்டு எண் 2 கரையிருப்பு வடபகுதியில் தார்தளம் அமைத்தல் | 20000 | | Pno.22 |
| 19 | வார்டு எண் 5 சிவசக்தி சாலையில ் தார்தளம் அமைத்தல | 50000 | 54658 | Pno.22 |
| 20 | வார்டு எண் 8 நேதாஜி சாலையில் ஓடை அமைத்தல் | 13000 | 13000 | Pno.24 |
| 21 | வார்டு எண் 4 புதுக்குளம் கீழத்தெருவில் தார்தளம் அமைத்தல் | 20000 | | Pno.24 |
| 22 | வார்டு எண் 10 அருந்ததியர் தெரு பகுதிகளில் தார் சாலை செப்பனிடுதல் | 8000 | | Pno.24 |
| | 2014-15 | | | |
| 23 | வார்டு என் 1-வடக்கு சிதம்பரம் நகரில் தார்தளம் அமைத்தல் | 20000 | 20000 | Pno.7 |
| 24 | வார்டு எண் 1 கைலாசபுரத்தில் தார்தளம் அமைத்தல் | 20000 | 20000 | Pno.5 |
| 25 | வார்டு எண் 9 குண்டலகேசி தெருவில் தார்தளம் அமைத்தல் | 16500 | 16500 | Pno.5 |
| 26 | வார்டு எண் 8 கொக்கிரகுளம் சாலைத் தெருவில் தார்தளம் அமைத்தல் | 18750 | 18750 | Pno.5 |
| 27 | வார்டு எண் 1, இந்தியா சிமெண்ட் காலனியில் தார் தளம் அமைத்தல் | 20000 | 20000 | Pno.4 |
| 28 | வார்டு எண் 1, குறிச்சி நகரில் தார் தளம் அமைத்தல் | 20000 | | Pno.7 |
| 29 | வார்டு எண1 கோகுல்நகர் பகுதியில் | 20000 | | Pno.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தார்தளம் அமைத்தல் | | | |
| 29 | வார்டு எண1 கோமதி நகரில் தார்தளம் அமைத்தல் | 30000 | 30000 | Pno.7,8 |
| 30 | வார்டு எண் 1 மங்களா குடியிருப்பு பகுதியில் தார்தளம் அமைத்தல். | 28250 | 28250 | Pno.7,8 |
| 31 | வார்டு எண் 39, ஞசயைெபயச பகுதியில் தார்தளம் அமைத்தல் | 15000 | 15000 | Pno.7,8 |
| 32 | வார்டு எண் 5, த.மு. ரோட்டில் தார்தளம் அமைத்தல் | 30000 | | Pno.7 |
| 33 | வார்டு எண் 8 வசந்தம் நகரில் தார்தளம் அமைத்தல் | 20000 | 20000 | Pno.5,6 |
| 34 | வார்டு எண் 1, செல்வ விக்னேஷ் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 20000 | 20000 | Pno.7,8 |
| 35 | வார்டு எண் 4 பாலாஜி அவூன்யு தார்தளம் அமைத்தல் | 11000 | | Pno.16 |
| 36 | வார்டு எண் 4 பாலாஜி அவூன்யு பகுதியில் தார்தளம் அமைத்தல் | 20000 | | Pno.16 |
| 37 | வார்டு எண் 1, கிருஷ்னாநகர் பகுதி தார்தளம் அமைத்தல | 15000 | | PNO. |
| | வார்டு எண் 1, செல்வ விக்னேஷ்நகர் பகுதி தார்தளம் அமைத்தல | 15000 | | Pno. |
| 38 | வார்டு எண் 2, பெரிய அம்மன் கோவில் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 19000 | | Pno.17 |
| 39 | வார்டு எண் 10 அருந்ததியர் தெரு பகுதிகளில் தார் சாலை செப்பனிடுதல் | 9500 | 9500 | Pno.19 |
| | 2015-16 | | | |
| 40 | வார்டு எண் 39, குறுக்குத்துறை சாலையில் தார்தளம் அமைத்தல் | 5250 | 5250 | Pno.14 |
| 41 | வார்டு எண் 10, பரணி நகர் நாலாவது ஐந்தாவது மற்றும் ஆறாவது தெருக்களில்தார்தளம் அமைத்தல் | 5500 | 5500 | Pno.24 |
| 42 | வார்டு எண் 3, நயினார்குளம் சாலையில் தார்தளம் அமைத்தல் | 5000 | 5000 | Pno.24 |
| 43 | வார்டு எண் 4, பாலபாக்கிய நகர் பாபுஜி நகர் தெருவில் தார்தளம் அமைத்தல் | 9500 | 9500 | Pno.24 |
| 44 | வார்டு எண் 9 , வெற்றி வேலடி விநாயகர் கோவில் தெருவில் தார்தளம் அமைத்தல் | 25950 | | Pno.34 |
| 45 | வார்டு எண் 1 கிருஷ்ணா நகரில் தார்தளம் அமைத்தல் | 25720 | | Pno.34 |
| 46 | வார்டு எண் 55 , கருவேலன் குன்று தெருவில் தார்தளம் அமைத்தல் | 20650 | | Pno.36 |
| 47 | வார்டு எண் 4, உடையார்பட்டியில் தார்தளம் அமைத்தல் | 20550 | | Pno.37 |
| 48 | வார்டு எண் 4 பாலாபாக்கியா நகர் 7வது தெரு மற்றும் 9வது தெருக்களில் தார்தளம் அமைத்தல் | 9900 | 9900 | Pno.37 |
| 49 | வார்டு எண் 10 பரணி நகர் 1வது தெரு மற்றும்2வது தெருக்களில் தார்தளம் அமைத்தல் | 9900 | 9900 | Pno.37 |
| 50 | வார்டு எண் 4 , பாபுஜி நகர் வடபகுதியில் தார்தளம் அமைத்தல் | 9900 | 9900 | Pno.38 |
| 51 | வார்டு எண் 4 , கிருஷ்ண நகர் தெற்குப் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 15150 | | Pno.38 |
| | 2016-17 | | | |
| 52 | வார்டு எண் 4 , மேகலிங்கிரம் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 7200 | | Pno.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 53 | வார்டு எண் 4 , உச்சிமகாளி அம்மன் கோவில் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 8800 | | Pno.2 |
| | மொத்தம் ரூ. | 873251 | 374323 | |

| | |
|---|---|
| EMD | 873251 |
| FSD | 374323 |
| TOTAL | 1247574 |

மேற்காணும் EMD/FSD தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)-ன்படி மாமன்ற அனுமதி பெற்று EMD/FSD தொகை ரூ.12,47,574/- மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 224

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

மதிப்பீட்டு எண். 51/13-14

---

15) திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மற்றும் தச்சநல்லூர் மண்டலங்களிலும் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்காக செலுத்திய EMD/FSD தொகையினை திரும்ப வழங்க கேட்டு திரு.டி.பாலசுப்பிரமணியன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | EMD | FSD | வைப்புத் தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | வா.எண்.42 பெருமாள் மேலரத வீதியில் தார் சாலை அமைத்தல் | 0 | 38391 | 2010-11 Pno.8 |
| 2 | ஒருங்கிணைந்த நகர்புற வளர்சிசத் திட்டம் சிப்பம் -4 தார்சாலை அமைத்தல் | 83206 | 85100 | 2012-13 Pno.26 |
| 3 | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் சிப்பம் -5 தார்சாலை அமைத்தல் | 77035 | 77500 | 2012-13 Pno.26 |
| 4 | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் சிப்பம் -6 தார்சாலை அமைத்தல் | 51908 | 27148 | 2012-13 Pno.26 EMD தொகையில் தணிக்கை பிடித்தம் செய்யப்பட்டு மீதம் ரூ.51908/- உள்ளது |
| 5 | வார்டு எண்.48 எம்.ஜி.ஆர் நகரில் தார்தளம் | 0 | 15000 | 2013-14 / I / Pno.47 |
| 6 | வார்டு எண்.48 ரயில் நகரில் தார்தளம் | 0 | 20000 | 2013-14 / I / Pno.47 |
| 7 | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் சிப்பம் -1 தார்சாலை அமைத்தல் | 500000 | 591770 | 2013-14/II/ Pno.3 |
| 8 | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் சிப்பம் -2 தார்சாலை அமைத்தல் | 318000 | 0 | 2014-15 Pno.34 |
| 9 | வா.எண்.8 நேதாஜி ரோடு கிழக்கு பகுதி தார்தளம் | 0 | 1537 | 2013-14 / I / Pno.31 |
| 10 | வா.எண்.6 பகுதியில் ஆற்றங்கரை ஓரம் ஆக்கிரமிப்பு அகற்றம் | 0 | 2100 | 2013-14 / I / Pno.33 |
| 11 | வா.எண்.6, 7 பகுதியில் ஆற்றங்கரை ஓரம் ஆக்கிரமிப்பு அகற்றம் | 0 | 4500 | 2013-14 / I / Pno.33 |
| 12 | வா.எண்.4 உலகம்மன் கோவில் தெரு சிமெண்ட் தளம் அமைத்தல் | 0 | 4000 | 2013-14 / I / Pno.34 |
| 13 | வா.எண்.10 இளங்கோ நகர் தார்தளம் | 0 | 15563 | 2013-14 / I / Pno.35 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைத்தல் | | | |
| 14 | வா.எண்.10 பரணி நகரில் தார்தளம் | 0 | 20516 | 2013-14 / I / Pno.36 |
| 15 | வா.எண்.8 நேதாஜி நகர் மேற்கு பக்கம் தார் சாலை | 0 | 8000 | 2013-14 / I / Pno.44 |
| 16 | வா.எண்.3 பாரத் பெட்ரோலியம் சாலையில் தார்தளம் | 0 | 30000 | 2013-14 / I / Pno.44 |
| 17 | வா.எண்3 ஊருடையான் குடியிருப்பு பகுதியில் தார்தளம் (ம) தடுப்புச் சுவர் அமைத்தல் | 0 | 53114 | 2013-14 / I / Pno.45 |
| 18 | வா.எண்.2 மேலகரையில் தார்தளம் அமைத்தல் | 0 | 20000 | 2013-14 / I / Pno.46 |
| 19 | வா.எண்.6 சிவபுரம் பகுதியில் கழிவுநீர் ஓடை அமைத்தல் | 0 | 9000 | 2014-15 Pno.27 |
| 20 | வா.எண்.4 சேந்திமங்கலம் பகுதியில் சாலை அமைத்தல் | 0 | 17783 | 2014-15 Pno.35 |
| 21 | வா.எண்.4 சேந்தமங்கலம் கிழக்கு பகுதியில் சாலை அமைத்தல் | 0 | 20925 | 2014-15 Pno.35 |
| 22 | வுா.எண்.8 வசந்தம் நகர் பகுதீயல் தார்தளம் | 0 | 1980 | 2014-15 Pno.40 |
| 23 | வா.எண்.8 வசந்தம் நகர் பகுதியில் தார்தளம் | 0 | 1808 | 2014-15 Pno.40 |
| 24 | வுா.எண்7 பகுதியில் கழிப்பிடம் அமைத்தல் | 0 | 2638 | 2014-15 Pno.41 |
| 25 | வா.எண்.2 கரையிருப்பு சாலையில் தார்தளம் | 0 | 16500 | 2014-15 Pno.41 |
| 26 | வுா.எண்.2 கரையிருப்பு சாலையில் தார்தளம் | 0 | 1311 | 2014-15 Pno.41 |
| 27 | வா.எண்.2 கீழக்கடையில் மற்றும் பிரான்குளம் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 0 | 1311 | 2014-15 Pno.41 |
| 28 | வா.எண்.1 செல்வவிக்னேஸ் நகர் பகுதியில் தார்தளம் | 0 | 1276 | 2014-15 Pno.42 |
| 29 | வா.எண்.1 சிதம்பர நகர் பகுதியில் தார்தளம் | 0 | 1241 | 2014-15 Pno.42 |
| 30 | வா.எண்.1 கோகுல் நகர் பகுதியில் தார்தளம் | 0 | 25510 | 2014-15 Pno.42 |
| 31 | வா.எண்.5 கைலாசபுரம் பகுதியில் தார்தளம் | 0 | 1775 | 2014-15 Pno.41 |
| 32 | வா.எண்.1 செல்வ விக்னேஸ் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் | 0 | 10000 | 2014-15 Pno.43 |
| 33 | வா.எண்.4 தெற்கு பாலபாக்யா நகரில் தார்தளம் | 0 | 18918 | 2014-15 Pno.46 |
| 34 | வா.எண். 4 பாலாஜி அவென்யு பகுதியில் தார்தளம் (ம) மழைநீர் வடிகால் | 0 | 20019 | 2014-15 Pno.46 |
| | TOTAL | 1030149 | 1166234 | |

| | |
|---|---|
| EMD | 1030149 |
| FSD | 1166234 |
| TOTAL | 2196383 |

அலுவலக குறிப்பு:

மேற்காணும் EMD/FSD தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)-ன்படி மாமன்ற அனுமதி பெற்று EMD/FSD தொகை ரூ.2196383/- மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 225

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மதிப்பீட்டு எண். 51/13-14)

---

16) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31159/2018/டிபி3 நாள் 5.3.2019-ல் தெரிவித்துள்ளபடி, அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA.I) நாள் 4.2.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a) நாள் 4.2.2019-ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்-2019 ஆணை வெளியிடப்பட்டுள்ள அரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 226

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் 1416/19/ஜிபி1)

---

17) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31159/2018/டிபி3 நாள் 5.3.2019-ல் தெரிவித்துள்ளபடி, அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA.I) நாள் 4.2.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a) நாள் 4.2.2019-ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் விதி எண் 30(1), (2)-ல் குறிப்பிட்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சியில் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS) ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விவரங்களை தயார் செய்து மாமன்ற ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தயார் செய்யப்பட்ட பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மேற்குறிப்பிட்ட தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS) ஆகியவற்றிற்கான சர்வே எண்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய பட்டியலுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 227

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் 1416/19/ஜிபி1)

---

18) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31159/2018/டிபி3 நாள் 5.3.2019-ல் தெரிவித்துள்ளபடி, அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA.I) நாள் 4.2.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a) நாள் 4.2.2019-ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்-2019ன் விதி 14ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும் கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு

வழங்குவதற்கேற்பவும், கட்டண விகிதங்களை திருத்தி நிர்ணயம் செய்து மாமன்ற ஒப்புதல் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி வழங்குதல் கட்டணம் போன்றவற்றிக்கு ஏற்கெனவே நடைமுறையிலிருந்து வரும் கட்டண விகிதங்களிலிருந்து ஆண்டுதோறும் 10% கூடுதலாக கட்டணம் நிர்ணயம் செய்வது நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

தற்போது சுற்றறிக்கையில் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகளுக்கு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளத்தின் அடிப்படையில் கட்டிட அனுமதி குறித்த கட்டணங்களை 04.2.2019 முதல் 31.03.2023 முடிய 5 ஆண்டுகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள கட்டணங்களிலிருந்து 50% கூடுதலாக கட்டணம் நிர்ணயம் செய்யவும் கட்டிட வரைபடவாளர்களின் உரிமம் காலம் புதுப்பித்தல் 5 ஆண்டுகொருமுறை எனவும் உரிமம் கட்டணம் ரூ.5000/- என திருத்தி நிர்ணயம் செய்துள்ளபடியால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு கட்டண விகிதங்களை திருத்தியமைக்க கூட்டப்பொருள் மாமன்றம் அனுமதிக்கு

| வ. எண் | சட்டப் பிரிவு | விபரம் | அனுமதி காலம் | யூனிட் | 2018-19ம் ஆண்டிற்கு 10% கூடுதலாக நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் | 4.2.2019 முதல் 3.2.2023 முடிய 50% கூடுதலாக நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 272 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் (அ) குடியிருப்பு உபயோக கட்டிடம் | 5 ஆண்டுகள் | ஒரு சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத் திற்கு | 44.00 | 66.00 |
| | | (ஆ)குடியிருப்பில்லாத கட்டிட ம் | | | 66.00 | 99.00 |
| 2 | 271 | (அ) கட்டிட, மனைப்பிரிவு வரைபடங்கள் கூடுதல் நகல்கள் அத்தாட்சி செய்து கொடுத்தல் | | ஒரு நகல் | 121.00 | 182.00 |
| 3 | | கட்டிடப் பொருட்களை சாலையோரம் / பொது இடங்களில் தற்காலிகமாக சேமித்து வைத்தல் (நேரடியாக தமது சொந்த இடத்தில் கொட்டி சேமித்து வைத்தால் இந்த கட்டணம் செலுத்த வேண்டியதில்லை) | 1 திங்கள் | 1 சதுர மீட்டர் மற்றும் அதன் பாகம் | 60.50 | 90.75 |
| 4 | | கட்டிட இடிபாடுகளை பொது இடத்தில் சாலையோரத்தில் தற்காலிகமாக சேமித்து வைக்க | 1 வாரம் | 1சதுர மீட்டர் மற்றும் அதன் பாகம் | 60.50 | 90.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | | மனைப்பிரிவு உரிமையாணைக் கட்டணம் (குறைந்தபட்ச கட்டணம் ரூ.6534.00) | ஒரு தடவை | 1 ஏக்கர் மற்றும் அதன் பாகம் | 5610.00 | 8415 |
| 6 | | மனை உட்பிரிவு உரிமையாணைக் கட்டணம் | ஒரு தடவை | ஒரு மனை | 880.00 | 1320 |
| 7 | | கட்டிட வரைபடவாளர் உரிமம் புதுப்பித்தல் | 5 ஆண்டுகள் | I Grade | 500 | 5000 |
| | | | | II Grade | 300 | 5000 |
| | | | | III Grade | 200 | 5000 |
| | | கட்டிட வரைபடவாளர் புதிதாக உரிமம் பெறுதல் | 5 ஆண்டுகள் | III Grade | 1200 | 6000 |

மேற்கண்டவாறு கட்டணம் வசூல் செய்யும் பொழுது கீழ்க்கண்ட பொது நிபந்தனைகளின்படி கட்டணம் வசூல் செய்யப்படும்.

1. அனுமதியின்றி நடைபெறும் கட்டுமானப் பணிகள் அனுமதி கோரி விண்ணப்பிக்கும் பொழுது உரிமையாணைக் கட்டணம் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் அனைத்து வகையான கட்டணங்களில் 100 சதவீதம் கூடுதலாக வசூலிக்கப்படும். இது காலம் கடந்து புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கும் பொருந்தும்

2. உரிமைக்காலம் முடியுமுன்னர் புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கு எவ்வித சலுகையுமின்றி மேலே குறிப்பிட்ட சட்ட நடைமுறையில் உள்ள கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

3. மதம், துக்கம், சுடுகாடு,அனாதை விடுதி,ஆதரவற்றோர் பள்ளிகள்/விடுதிகள், கண், காது கேளாதோர் ஊமையர் பள்ளிகள்/விடுதிகள், குடிசைகள் போன்றவைகளுக்கு கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு உண்டு.

4. அனைத்து மனுக்களின் மீது பெறப்படும் மொத்த கட்டணத்தில் 25 சதவீதம் மேற்படி மனு பரிசீலனைக் கட்டணம் என சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு பொருள் கொள்ள வேண்டும் எந்த சந்தா்ப்பத்திலாவது ஏதாவது ஒரு கட்டணத்தை திரும்ப வழங்க நேரிட்டால் 25 சதவீதம் கழித்து மீதத் தொகையை மட்டுமே திரும்ப வழங்கப்படும்.

5. திருட்டுத் தனமாக அனுமதியின்றி பொது இடங்களில் கட்டிட இடிபாடுகளை கொட்டும் நபர்கள்/வாகனங்களுக்கு அபராதம் வசூல் செய்யப்படும்.

அலுவலகக்குறிப்பு:

மேற்கண்ட விபரப்படி 4.2.2019 முதல் 31.3.2023 முடிய திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க பொருளில் கண்டுள்ள அட்டவணையின்படி 50% கூடுதலாக வசூலிக்கவும், கட்டிட வரைபடவாளர்களின் உரிமம் காலம் 5 ஆண்டுகொருமுறை எனவும் அதற்கான கட்டணம் ரூ.5000/- மற்றும் புதிதாக கட்டிட வரைபடவாளரின் உரிமத்தொகை ரூ.6000/- எனவும் நிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 228

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் 1416/19/ஜிபி1)

19) திருநெல்வேலி மாநகராட்சியில் ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதியுதவியுடன் (KfW) மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலைகள் அமைக்கும் திட்டம் 2014-15 –ன் கீழ் தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி சாலைப் பணிகளில் அமைக்கப்பட்ட சாலைகளை அவ்வப்போது சரிபார்ப்பதற்கு தேவையான தளவாட சாமான்களை கொள்முதல் செய்வதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு:-

| Sl. No. | Description | Quantity | Elmech Associates, Thanjavur | Global Surveying & Mapping Kanchipuram | Builders Service centre, Thiruchirappalli. |
|---|---|---|---|---|---|
| 1 | Marshall stability apparatus load frame, 6" mould 2 rammer, 1 breaking head assembly and pedestral. | 1No | 87800/- | 94600/- | 95600/- |
| 2 | Ring and Ball apparatus (softening point) | 1No | 18100/- | 26800/- | 24800/- |
| 3 | CBR Apparatus hand cum motarized with complete all accessories. | 1No | 88000/- | 95600/- | 96600/- |
| 4 | Flakiness and Enangation index | 1 set | 1400/- | 2100/- | 1900/- |
| | TOTAL | | 195300/- | 219100/- | 218900/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/s.Elmech Associates, Thanjavur நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விட குறைவாக உள்ளதால் அதனை ஒப்புக்கொள்ளவும் அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.195300/-க்கும், மேற்படி திட்டப் பணிகளின் அவசர அவசியம் கருதி அமைக்கப்பட்ட சாலைகளை அவ்வப்போது சரிபார்ப்பதற்கு தேவையான சாமான்களை திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு எண்.15ன் கீழ் மேற்படி சாமான்களை M/s.Elmech Associates, Thanjavur நிறுவனம் மூலம் விநியோகம் செய்தமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதியுதவியுடன் (KfW) மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலைகள் அமைக்கும் திட்டம் 2014-15 –ன் கீழ் தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகளில் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை அவ்வப்போது சரிபார்ப்பதற்கு தேவையான தளவாட சாமான்களை அவசர அவசியம் கருதி திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு 15-ன் கீழ் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.Elmech Associates, Thanjavur நிறுவனம் மூலம் தளவாட சாமான்கள் விநியோகம் செய்தமைக்கும் அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.195300/- க்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 229

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண்.இ1.2089 2013)

20) திருநெல்வேலி மாநகராட்சியில் ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதியுதவியுடன் (KfW) மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலைகள் அமைக்கும் திட்டம் 2014-15ன் கீழ் தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி சாலைப் பணிகளில் அமைக்கப்பட்ட சாலைகளை அவ்வப்போது சரிபார்ப்பதற்கு தேவையான தளவாட சாமான்களை கொள்முதல் செய்வதற்கு வரப் பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-

| Sl. No | Description | Quantity | PER | Elmech Associates Thanjavur | Global Surveying &Mapping Kanchi puram | Builders Services centre, Thiruchirapp palli |
|---|---|---|---|---|---|---|
| 1 | Marshall stability apparatus Load frame, 6" mould 2 rammer, 1 breaking head assembly and pedestral | 1 No | Each | 87800/- | 94600/- | 95600/- |
| 2 | Ring and Ball apparatus (softening point) | 1 No | Each | 18100/- | 26800/- | 24800/- |
| 3 | CBR Apparatus hand cum motarized with complete all accessories. | 1 No | Each | 88000 | 95600/- | 96600/- |
| 4 | Flakiness and Enangation index | 1 set | Each | 1400/- | 2100/- | 1900/- |
| | Total | | | 195300 | 219100 | 218900 |
| | VAT 5% | | | 9765 | 10955 | 10945 |
| | Grand Total | | | 205065 | 230055 | 229845 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/s. Elmech Associates Thanjavur நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விட குறைவாக உள்ளதால் அதனை ஒப்புக்கொள்ளவும் அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.205065/-க்கும், மேற்படி திட்டப் பணிகளின் அவசர அவசியம் கருதி அமைக்கப்பட்ட சாலைகளின் தன்மையினை அவ்வப்போது சரிபார்ப்பதற்கு தேவையான தளவாடசாமான்களை திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மேற்படி சாமான்களை விநியோகம் செய்தமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதியுதவியுடன் (KfW) மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலைகள் அமைக்கும் திட்டம் 2014-15ன் கீழ் தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகளில் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை அவ்வப்போது சரிபார்ப்பதற்கு தேவையான தளவாட சாமான்களை அவசர அவசியம் கருதி திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Elmech Associates Thanjavur நிறுவனம் மூலம் தளவாட சாமான்கள் விநியோகம் செய்தமைக்கும் அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.205065/-க்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 230

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண்.இ1.2089 2013)

---

21) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகம், 2019-2022 –ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்படும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம இனங்களுக்கு 29.01.2019

அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட டவுண் சாலையில் உள்ள கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. திரு,பாலமுருகன் என்பவர் உச்ச ஏலக்கேள்வித் தொகையாக ரூ.102000/- கேட்டுள்ளார். திரு.டென்னிஸ் என்பவர் ரூ.101000/- ஏலக்கேள்வித் தொகையாக கேட்டுள்ளார். திரு. பாலமுருகன் என்பவரின் உச்ச ஏலக்கேள்வித் தொகையானது, திரு.டென்னிஸ் என்பவரின் ஏலக்கேள்வித் தொகையை விட ரூ.1000/- கூடுதலாகவும், குறுமத்தொகையைவிட ரூ.27000/- கூடுதலாகவும் உள்ளது. எனவே மேற்படி உரிம இனத்திற்கு அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி மேற்படி உரிம இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 29.01.2019 அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட டவுண் சாலையில் உள்ள கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு,பாலமுருகன் என்பவர் உச்ச ஏலக்கேள்வித் தொகையாக ரூ.102000/- கேட்டுள்ளார். திரு.பாலமுருகன் என்பவரின் உச்ச ஏலக்கேள்வித் தொகையானது, நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகை ரூ.75000/-ஐ விட ரூ.27000/- கூடுதலாகும். எனவே திரு. பாலமுருகன் என்பவரின் ரூ.102000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) ற்கான உச்ச கேள்வியினை ஏற்று அன்னார்க்கு மேற்கண்ட உரிமத்தினை அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2022 முடிய உள்ள காலத்திற்கு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 231

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ந.க.எண் : அ1/ 5689 /2018

---

22) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகம், 2019-2022—ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்படும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம இனங்களுக்கு 29.01.2019 அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட மதுரை ரோடு வேன் ஸ்டாண்டில், அங்கு நிறுத்தப்படும் வேன்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலத்தில் ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார். ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. திரு.எஸ்.முத்துகிருஷ்ணன் என்பவர் ஏலக்கேள்வித் தொகையாக ரூ.125000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் மட்டும்) கேட்டுள்ளார். திரு.எஸ்.முத்துகிருஷ்ணன் என்பவரின் ஏலக்கேள்வித் தொகையானது, குறுமத்தொகையைவிட ரூ.3725/- கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி உரிம இனத்திற்கு அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி மேற்படி உரிம இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் அனுபவித்து கொள்ள உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 29.01.2019 அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட மதுரை ரோடு, வேன் ஸ்டாண்டில் அங்கு நிறுத்தப்படும் வேன்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு,முத்துகிருஷ்ணன் என்ற ஒருவர் மட்டுமே ஏலக்கேள்வித் தொகையாக ரூ.125000/- கேட்டுள்ளார். மேற்கண்ட உரிம இனமானது, வேன் ஸ்டாண்டில் வேன்களை நிறுத்தி வாடகைக்கு எடுத்து செல்லும் வாகன ஓட்டுனர்களால் எடுக்கப்பட்டு கடந்த 6 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களிலும் (2013-2016 & 2016-2019) இவ்வினத்திற்கு போட்டி ஏதும் இல்லை. எனவே மாநகராட்சியின் வருவாயினை கருத்திற்கொண்டு இவ்வினத்திற்கு கேட்கப்பட்டுள்ள ஒரே ஒரு ஏலக்கேள்வி தொகையினை ரூ.1,25,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் மட்டும்)ஐ ஏற்று, திரு.முத்துகிருஷ்ணன் என்பவருக்கு அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்

25.05.2009ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2022 முடிய உள்ள காலத்திற்கு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 232

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் : அ1/ 5689 /2018)

---

**23)** திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு தொடர் நடவடிக்கையாக தண்ணீர் தேங்கும் பகுதிகளில் கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் பொருட்டு விரைந்து நடவடிக்கை எடுத்து தீவிரமாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக மாநகராட்சி துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு இம்மாநகராட்சியில் உள்ள 55 வார்டுகளுக்கு தேவைக்கேற்ப நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/ஜே1, நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு.எண் 13433/2018/ஜே1, நாள் 17.09.2018–ல் தெரிவிக்கப்பட்ட Plan 300 HH–ன்படி மாநகராட்சியில் மொத்தமுள்ள 155408 வீடுகளுக்கு, ஒரு நாளுக்கு, ஒரு நபருக்கு 50 வீடுகள் வீதம் 6 நாட்களுக்கு 300 வீடுகள் DBC பணியாளர்கள் பணிபுரிந்தால் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ள 517 DBC பணியாளர்களை 30.10.2018 முதல் 88 நாட்கள் பணியில் ஈடுபடுத்த மாமன்றத் தீர்மானம் எண் 144, நாள் 11.12.2018–ன்படி அனுமதி பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேற்படி பணியாளர்களின் அனுமதி காலம் 25.01.2019 தேதியுடன் முடிவடைகிறது.

இப்பணியின் முக்கியத்துவம் கருதி மேற்படி 517 DBC பணியாளர்களை 28.01.2019 முதல் 88 நாட்களுக்கு தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/ஜே1, நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ஒ.மு.எண் 13433/2018/ஜே1, நாள் 17.09.2018–ன்படியும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பட்டு வரும் வாராந்திர டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை ஆய்வுக் கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகள், நகர பஞ்சாயத்துகள், நகராட்சிகள் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளிலும் தேவையான களப்பணியாளர்களை நியமித்து டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தொய்வில்லாமல் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையிலும், திருநெல்வேலி மாநகராட்சியில் 517 DBC பணியாளர்களை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.320/– வீதம் மாவட்ட ஆட்சித் தலைவர் தற்போது நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ஊதியத்தின் அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

மேற்படி 517 DBC பணியாளர்களின் அனுமதி காலம் 25.01.2019ம் தேதியுடன் முடிவடைவதால் இப்பணியின் முக்கியத்துவம் கருதி மேற்படி பணியாளர்களை 28.01.2019 தேதி முதல் 88 நாட்களுக்கு பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தவும், அதற்கான ஊதிய செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 233

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(எச்2/3534/2015)**

---

24) திருநெல்வேலி மாநகாட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்காணும் பணிகளுக்காக செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு M/s RR Builders நிறுவனத்தால் 03.07.2018 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | பணி விபரம் | தொகை (ரூ) | MPM Zone Lapsed பதிவேடு |
|---|---|---|---|
| 1 | Constrn. Of drain coverslab in between Kajanayagam Street and Mailakathar street | 14,150 | 2014-15 P.No.24 |

அலுவலகக்குறிப்பு

மேற்படி முன்வைப்புத் தொகை மேலப்பாளையம் மண்டல வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கு மேல் உள்ளபடியால் நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(iii)-ன்படி முன்வைப்புத் தொகை ரூ.14150/- மட்டும் M/s RR Builders நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 234

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண் 177/12-13-மே.பா.)

---

25) திருநெல்வேலி மாநகாட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்காணும் பணிகளுக்காக செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு M/s NHA Associates நிறுவனத்தால் 01.03.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண். | பணி விபரம் | தொகை (ரூ.) | MPM Zone Lapsed பதிவேடு |
|---|---|---|---|
| 1 | Providing BT surface at Yadhavar 2nd street in wno.28 | 3,850 | 2014-15/II/ Pno.31 |
| 2 | Pro’ BT surface & Constn. of drain at Noble Cross street in wno.26 | 4,500 | 2014-15/II/ Pno.31 |
| 3 | Pro’ BT surface at Bright Colony Viswalakshmi nagar wno.28 | 40,000 | 2014-15/II/ Pno.31 |
| 4 | Pro’ BT surface at NewBus stand platform wno.28 | 71,000 | 2014-15/II/ Pno.31 |
| 5 | Pro’ BT surface at STC road to TNware house godown junction of RTO road wno.26 | 60,000 | 2014-15/II/ Pno.31 |
| 6 | Pro’ BT surface at at Pothigai nagar main road to Thamirapathy colony wno.26 | 45,000 | 2014-15/II/ Pno.31 |
| 7 | Pro’ BT surface at STC road from TVM road to TNware house road wno.26 | 53,000 | 2014-15/II/ Pno.31 |
| 8 | Pro’ BT surface at STC road to TN ware house godown junction of RTO road in wno.26 | 57,584 | 2014-15/II/ Pno.32 |
| 9 | Pro’ BT surface at Pothigai nagar main road to Thamirapathy colony in wno.26 | 46,502 | 2014-15/II/ Pno.32 |
| 10 | Pro’ BT surface at STC road from TVM road to TNware house road wno.26 | 54,402 | 2014-15/II/ Pno.32 |
| 11 | Pro’ BT surface at New Bus stand platform in wno.28 | 77,443 | 2014-15/II/ Pno.32 |

| | | | |
|---|---|---|---|
| 12 | Pro' BT surface at North side & south side of Perumalpuram water tank road in wno.26 | 21,500 | 2014-15/II/ Pno.34 |
| 13 | Pro' BT surface at North Thaikka street and cross street in wno.35 | 20,000 | 2014-15/II/ Pno.34 |
| 14 | Pro' BT surface at NGO A colony infront of Pillayar koil 4th street wno.27 | 16,500 | 2014-15/II/ Pno.34 |
| 15 | Pro' BT surface at NGO A colony North portion and 12th cross street wno.27 | 21,500 | 2014-15/II/ Pno.34 |
| 16 | Pro' BT surface at NGO A colony main road 14th & 15th cros street in wno.27 | 19,400 | 2014-15/II/ Pno.34 |
| 17 | Pro' BT surface at Mullai nagar and Anna Nagar in wno.27 | 18,000 | 2014-15/II/ Pno.34 |
| 18 | Pro' BT surface at Perumalpuram EB Office road wno.26 | 20,000 | 2014-15/II/ Pno.34 |
| 19 | Pro' BT surface at inbetween NGO B colony Pillayar koil street n wno.27 | 20,000 | 2014-15/II/ Pno.34 |
| 20 | Pro' BT surface at BT surface Gnaniarappa 3rd 4th 5th street wno.33 | 18,100 | 2014-15/II/ Pno.34 |
| 21 | Pro' BT surface at Seikul Akbar street wno.31 | 12,800 | 2014-15/II/ Pno.34 |
| 22 | Attending the patchwork at damaged BT surface at various places in wno.19, 26, 27, 28 & 29 | 10,000 | 2014-15/II/ Pno.34 |
| | TOTAL | 7,11,081 | |

அலுவலகக்குறிப்பு

மேற்படி முன்வைப்புத் தொகை மேலப்பாளையம் மண்டல வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. தொகை ஒவ்வொன்றும் காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கு மேல் உள்ளபடியால் நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(iii)-ன்படி முன்வைப்புத் தொகை ரூ.711081/- மட்டும் M/s NHA Associates நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 235

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண் 148/12-13-மே.பா.)

---

**26)** திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 19, குமரேசன் நகர் பகுதியை சார்ந்த பொது மக்கள் புதிய தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி கொடுக்க கேட்டுள்ள விண்ணப்பத்தின்படி, மேற்குறிப்பிட்ட இடம் நேரடி ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் புதியதாக 7 எண்ணம் மின்கம்பங்கள் அமைத்து 7 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும், ஏற்கனவே அமைந்துள்ள 3 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 3 எண்ணம் 20 W LED விளக்கு பொருத்திடவும் ஆக மொத்தம் 10 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான செலவு உத்தேசம் ரூ.2,10,000/– (இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் புதிதாக 7 எண்ணம் மின்கம்பங்கள் அமைத்து 7 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும், ஏற்கனவே அமைந்துள்ள 3 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 3 எண்ணம் 20 W LED

விளக்குகள் பொருத்திடவும் ஆக மொத்தம் 10 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான உத்தேச செலவு தொகை ரூ.2,10,000/– (இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 236

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ2/828/19–மே.பா)

---

27) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம், வார்டு எண் 17, தூத்துக்குடி மெயின் ரோடு, வெற்றித் திருநகர் பல்க் கீழ்பக்கம் அணுகுசாலையில் ஏற்கனவே உள்ள 7 (HT) மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 90 W LED 7 விளக்குகள் அமைக்கவும், மேலும் ஏற்கனவே உள்ள 20 W LED விளக்கை கழற்றிவிட்டு 90 W LED 3 எண்ணங்கள் பொருத்தவும், மின்வாரிய பணிகள் மேற்கொள்ளவும் மின்வாரியம் மூலம் செலவுகள் உட்பட உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம், வார்டு எண் 17, தூத்துக்குடி மெயின் ரோடு, வெற்றித் திருநகர் பல்க் கீழ்பக்கம் அணுகுசாலையில் ஏற்கனவே உள்ள 7 (HT) மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 90 W LED 7 விளக்குகள் அமைக்கவும், மேலும் ஏற்கனவே உள்ள 20 W LED விளக்கை கழற்றிவிட்டு 90 W LED 3 எண்ணங்கள் பொருந்தவும், மின்வாரிய பணிகள் மேற்கொள்ளவும் மின்வாரியம் மூலம் செலவுகள் உட்பட உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம எண் 237

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/717/2019–பாளை)

---

28) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம், வார்டு எண் 23, சிவன்கோவில் தெற்கு மாடத் தெருவில் 80 மீட்டர் இடைவேளியில் மின்கம்பமோ, தெருவிளக்கோ இல்லாததால் கோவிலுக்கு செல்லும் பொது மக்கள் நடமாட மிகவும் கஷ்டமாக உள்ளது என பொது மக்களிடமிருந்து மனு வரப்பெற்றுள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்படி தெருவில் ஒரு மின்கம்பம் மற்றும் லைன் அமைத்து 90 W LED தெருவிளக்கு ஒன்று அமைத்திடவும், மின்வாரிய பணிகள் மேற்கொள்ளவும் மின்வாரியம் மூலம் செலவுகள் உட்பட உத்தேச செலவினம் ரூ.35000/–த்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம், வார்டு எண் 23, சிவன்கோவில் தெற்கு மாடத் தெருவில் 80 மீட்டர் இடைவேளியில் மின்கம்பமோ, தெருவிளக்கோ இல்லாததால் கோவிலுக்கு செல்லும் பொது மக்கள் நடமாட மிகவும் கஷ்டமாக உள்ளது என பொது மக்களிடமிருந்து மனு வரப்பெற்றுள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்படி தெருவில் ஒரு மின்கம்பம் மற்றும் லைன் அமைத்து 90 W LED தெருவிளக்கு ஒன்று அமைத்திடவும், மின்வாரிய பணிகள் மேற்கொள்ளவும் மின்வாரியம் மூலம் செலவுகள் உட்பட உத்தேச செலவினம் ரூ.35000/–த்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 238

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**(ந.க.எண் இ2/674/2019–பாளை)**

---

29) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவது தொடர்பாக சட்டமன்ற பேரவையில் 4.6.2018 அன்று நடைபெற்ற மான்ய கோரிக்கையின் போது (34) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

- ❖ அறிவிப்பு எண் - 6 "குடிநீர் விநியோகத்தில் புதிய முயற்சியாக அனைத்து மாநகராட்சிகள்/நகராட்சிகளில் திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்"
- ❖ அறிவிப்பு எண் - 9 "அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் புதிய முயற்சியாக திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்."

மேற்கண்ட அறிவிப்பினை தொடர்ந்து அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் எதிர்வரும் 30 ஆண்டுகளுக்கான மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் திட்டமிட்டு வடிவமைத்து, அனைத்து பொதுமக்களுக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் எளிதாக கிடைக்கும் வகையில், மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம் என அரசால் முடிவு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் தொடர்பான வைப்புத் தொகை மற்றும் இணைப்பு கட்டணம் ஆகியவை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியில் வரவு வைக்கப்படும் என்பதால் அவற்றை தனித்தனியாக அந்தந்த நகராட்சி/மாநகராட்சிகளின் சொந்த நிதியில் இருந்து செய்யப்பட வேண்டும். மேலும், ஒப்பந்ததாரர் மூலம் எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இணைப்புகளை அனைவருக்கும் வழங்க வேண்டும்.
- குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டண வைப்புத் தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தினை அந்தந்த வீட்டு சொத்துவரி கேட்புடன் இணைத்து 10 சம தவணைகளாக வசூலிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்ட விபரத்தினை சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிகளை பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்
- அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உபவிதிகளில் உரிய திருத்தங்கள் செய்து நடைமுறைபடுத்த வேண்டும்.
- இத்திருத்தங்கள் மேற்கொள்ளும்போது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ல் உட்பிரிவு 3 (d), (e) மற்றும் உட்பிரிவு 5-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 309 மற்றும் 310-ல் வரையறுக்கப்பட்ட விதிகளை கடைபிடிக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றது.

- மேற்கூறியவாறு, அனைத்து மாநகராட்சிகளும் முறையே வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு அந்தந்த மாநகராட்சிக்குரிய உபசட்ட விதிகளில் (By laws) திருத்தங்கள் மேற்கொள்ளும்போது, மேலே குறிப்பிட்ட அனைத்து விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு அதன்படி செயல்படுத்த வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கலாம் என அரசாணை எண்.126 நாள் 28.11.2018 மாமன்றத்தின் பார்வைக்கு.

அலுவலகக்குறிப்பு:

(1) மேற்படி அரசாணை எண்.126 நாள் 28.11.2018 —ஐ மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(2) அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 239

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/8852/2018)

---

30) திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் 23 அங்கன்வாடி மையங்கள் புதிதாக கட்டுவதற்கு திட்ட அலுவலர் (ICDS), திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் 2073/அ3/ 2014 நாள் 11.6.2015 —ம் தேதிய கடிதத்தின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி, இந்திய அரசு நிதி ரூ.4.50 இலட்சம் மற்றும் மாநகராட்சி நிதி ரூ.1.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் 17 கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள 6 இடங்களில் இடப்பிரச்சினை காரணமாக அங்கன்வாடி மையங்கள் கட்ட இயலவில்லை. மேற்படி 6 இடங்களுக்கு பதில் புதிதாக கீழ்க்கண்ட 6 இடங்களில் அங்கன்வாடி மையங்கள் கட்டி அதற்கான பணி முடிவு அறிக்கை மற்றும் பயனீட்டு சான்றினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட திட்ட அலுவலரிடம் இருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டிய இடம் பின்வருமாறு:-

| வ. எண். | வட்டாரத்தின் பெயர் | அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டப்பட வேண்டிய இடம் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | பாளையங்கோட்டை | சத்திரம் புதுக்குளம் | தச்சநல்லூர் |
| 2 | பாளையங்கோட்டை | ஆர்.எஸ்.ஏ.நகர் | தச்சநல்லூர் |
| 3 | பாளையங்கோட்டை | கக்கன்நகர் | பாளையங்கோட்டை |
| 4 | திருநெல்வேலி (பொது) | மனகாவலம்பிள்ளை மருத்துவமனை தெரு | பாளையங்கோட்டை |
| 5 | திருநெல்வேலி (பொது) | ராஜேந்திரநகர் | பாளையங்கோட்டை |
| 6 | திருநெல்வேலி (பொது) | பெருமாள் சன்னதி தெரு | பாளையங்கோட்டை |

தற்போது ஒரு அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.9.85 இலட்சம் ஆகும். எனவே, அதன்படி 6 அங்கன்வாடி மைய கட்டிடங்களுக்கு மொத்தம் ரூ.59.10 இலட்சம் (6x9.85) ஆகும் என்பதால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.27 இலட்சம் (6x4.50) போக மீதமுள்ள ரூ.32.10 இலட்சம் (6x5.35) தொகையினை வழங்குமாறு திட்ட அலுவலர் (ICDS) —ம் கேட்கபட்டதில், திட்ட அலுவலர், 27.2.2019-ம் தேதியிட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட

அலுவலகத்தில் எந்த ஒரு தலைப்பின் கீழும் எந்தவித பொதுநிதி ஏதும் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், திட்ட அலுவலரின் கடிதத்தில், மேற்கண்ட 6 இடங்களில் அங்கன்வாடி மைய கட்டிடங்கள் கட்டி முடித்து அதற்கான பணி முடிவு அறிக்கை மற்றும் பயனீட்டு சான்றினை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதாலும், 6 அங்கன்வாடி மைய கட்டிடங்களுக்கு மொத்தம் ரூ.59.10 இலட்சம் (6x9.85) ஆகும் என்பதால் ஒதுக்கீடு செய்து பெறப்பட்ட தொகை ரூ.27 இலட்சம் (6x4.50) போக மீதமுள்ள ரூ.32.10 இலட்சம் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட 17 எண்ணம் அங்கன்வாடி மைய கட்டிடங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்தில், திட்ட அலுவலரிடம் (ICDS) இருந்து ஒதுக்கீடு செய்து பெறப்பட்ட தொகை ரூ.76.50 இலட்சம் (17x4.50) போக மீதமுள்ள ரூ.25.50 இலட்சம் (17x1.50) தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கவும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

(அ) பொருளில் கண்ட விபரப்படி, தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட (1) சத்திரம் புதுக்குளம், (2) ஆர்.எஸ்.ஏ.நகர், பாளையங்கோட்டை மண்டலப் பகுதிக்குட்பட்ட (3) மனகாவலம்பிள்ளை மருத்துவமனை தெரு, (4) கக்கன்நகர் , (5) ராஜேந்திரநகர் மற்றும் (6) பெருமாள் சன்னதி தெரு போன்ற இடங்களில் புதிதாக 6 எண்ணம் அங்கன்வாடி மைய கட்டிடங்கள் கட்டுவதற்கும், தற்போது ஒரு அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.9.85 இலட்சம் என்பதால், 6 எண்ணம் அங்கன்வாடி மைய கட்டிடங்களுக்கு மொத்தம் ரூ.59.10 இலட்சம் (6x9.85) ஆகும். எனவே, ஒதுக்கீடு செய்து பெறப்பட்ட தொகை ரூ.27 இலட்சம் (6x4.50 ) போக மீதமுள்ள ரூ.32.10 இலட்சம் (6x5.35) தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) மேலும், ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட 17 எண்ணம் அங்கன்வாடி மைய கட்டிடங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்தில், திட்ட அலுவலரிடம் (ICDS) இருந்து ஒதுக்கீடு செய்து பெறப்பட்ட தொகை ரூ.76.50 இலட்சம் (17x4.50) போக மீதமுள்ள ரூ.25.50 இலட்சம் (17x1.50) தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 240

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(E1/1376/2019)

---

31) பணியாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்திலிருந்து இந்திய அரசு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தால் பிரசுரிக்கப்பட்ட அறிவிக்கை எண் S.O 30 (E) நாள் 08.01.2011 மற்றும் பணியாளர் சேமநலநிதி மற்றும் பல்வகை வழிவகைச் சட்டம் 1952 ஆனது இவ்வறிவிக்கை பிரசுரிக்கப்பட்ட நாளில் ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் 20 மற்றும் அதற்கு கூடுதலாக பணிபுரியும் பணியாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தும் என்றும் அதன்படி திருநெல்வேலி மாநகராட்சியானது இச்சட்டத்தின் கீழ் 8.1.2011 முதல் கொண்டு வரப்பெற்று பணியாளர் சேமநல நிதி 12%, மாநகராட்சி பங்குத்தொகை 12% சேர்த்து செலுத்துமாறு இம்மாநகராட்சிக்கென சேமநலநிதி குறியீடு எண் TN/89230 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உதவி ஆணையாளர், பணியாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் EPF and MP Act 1952 under section 7A-ன் கீழ் 19.6.2013 முதல்

12.03.2019 வரை 80 முறை விசாரணை நடைபெற்றுள்ளது. மேற்படி விசாரணையில் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் பயன்பெறாத பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், சுய உதவிக் குழு பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் பணியாளர்களின் பெயர் வருகைப்பதிவேடு, கூலி விவரங்கள் 2011 முதல் தற்போது வரையிலான விவரங்களை வழங்குமாறும், மேலும் அன்னார்களிடமிருந்து 2011 முதல் EPF பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை மாநகராட்சி பங்குத்தொகையுடன் திருநெல்வேலி மாநகராட்சிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட கணக்கு எண். TN/89230-ல் செலுத்துமாறும். தவறும்பட்சத்தில் EPF and MP Act 1952 under section 14, 14(2) and Section 8B to 8 G-ன்படி சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என தொழிலாளர் சேமநலநிதி அலுவலக அறிவிப்பு எண். TN/TNY/89230/EO (ST)/2018 நாள் 28.03.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுய உதவிக்குழு, துப்புரவு பணியாளர்கள், அம்மா உணவக பணியாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களில் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் பயன் பெறாத 765 பணியாளர்களை இத்திட்டத்தின் கீழ் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்படி தொகையை பணியாளர் வருங்கால வைப்புநிதி அலுவலத்தில் உரிய காலத்தில் செலுத்தி e-filing செய்வதற்கு தேவையான தொழிலாளர் பெயர் மற்றும் முகவரி, பணியின் விவரம், பணியில் சேர்ந்த நாள், பிறந்த நாள் மற்றும் நாள் ஊதியம் மற்றும் மாத ஊதியம், வங்கிக் கணக்கு எண் மற்றும் ஆதார் எண் ஆகிய விவரங்களை சேகரித்து இப்பணியினை மேற்கொள்ள இம்மாநகராட்சியில் பணியாளர்களின் பணிச்சுமை மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறையின் காரணமாக காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கவும், மேலும் சேமநலநிதி அலுவலகத்தால் சட்டப்படியாக எடுக்கப்படும் நடவடிக்கையினை தவிர்த்திடும் பொருட்டு இப்பணிக்கு தனியாக EPF ஆலோசகர் ஒருவரை நியமித்து இப்பணியினை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

தற்பொழுது இப்பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட மூன்று நிறுவனத்திடமிருந்து விருப்ப விண்ணப்ப கடிதத்துடன் விலைப்புள்ளிகள் குறிப்பிட்டு வரப்பெற்றுள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம் மூலம் EPF திட்டத்தில் செலுத்தும் தொகையில் மான்யம் பெறப்படும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டு தங்களை இப்பணியில் EPF ஆலோசகராக நியமிக்க கேட்டுள்ளார்கள். மேற்படி கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | SHARON CONSULTANCY, 172 A-1, First Main Street, N.H. Colony, Perumalpuram, Tirunelveli | RBK ASSOCIATES, 14, First Main Street, Near, FX School, Vannarpettai, Tirunelveli | SHREE AUDITS, SV Medicals Complex, Kovilpatti |
|---|---|---|---|---|
| 1 | பணியாளர்களின் தகவல்களை தங்கள் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு கணனி அறிக்கையினை தயாரிக்க ஒரு ஊழியருக்கு 15 ரூபாய். | 15 | 30 | 40 |
| 2 | இவ்ஊழியர்களை தொழிலாளர்கள் சேமநலநிதி திட்டத்தின் கீழ்கொண்டுசென்று ஒவ்வொரு ஊழியர்களுக்கும் தனித்தனியே UAN No. வாங்குவதற்கு ஒரு | 25 | 70 | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியருக்கு 25 ரூபாய் | | | |
| 3 | தாங்கள் ஏற்கனவே 08.01.2011-ல் திருநெல்வேலி மாநகராட்சிக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கணக்கு எண். MDTNY 89230000 இன்றைய தினத்தில் நடைமுறைப்படுத்தி செயலாக்கத்திற்கு கொண்டுவர ரூ.9500/- | 9500 | 10500 | 11000 |
| 4 | ஒவ்வொரு மாதமும் ஊழியர்களின் வருகை பதிவு, மாத தொகுப்பு ஊதியம் இத்தகவல்களை Online மூலம் பதிவு செய்து ஊழியர்களின் சேமநலநிதியை செயல்பாட்டில் வைக்க மாதம் ரூ.12500/- | 12500 | 13500 | 15000 |

மேற்கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளிகளின்படி கணனி அறிக்கை தயாரிப்பதற்கு ஒரு பணியாளருக்கு ரூ.15/- வீதம் 765 பணியாளர்களுக்கு ரூ.11475/-, சேமநலநிதி திட்டத்தின் கீழ் கொண்டு வர ஒரு பணியாளருக்கு ரூ.25/- வீதம் 765 பணியாளர்களுக்கு ரூ.19125/- மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிக்கு கணக்கு எண் 89230-ஐ இன்றைய தினத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.9500/- ஆக மொத்தம் ரூ.40100/- எனவும், இது தவிர்த்து பணிகயாளர்களின் வருகை பதிவை Online மூலம் பதிவு செய்வதற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.12500/- வீதம் ஷேரன் கன்சல்டென்சி, திருநெல்வேலி நிறுவனத்திற்கு செலுத்தவும், மேலும் இம்மாநகராட்சியில் EPF ஆலோசகராக ஷேரன் கன்சல்டென்சி, திருநெல்வேலி நிறுவனத்தை நியமிப்பது குறித்தும், மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

பணியாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்திலிருந்து இந்திய அரசு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தால் பிரசுரிக்கப்பட்ட அறிவிக்கை எண் S.O 30 E நாள் 08.01.2011 மற்றும் பணியாளர் சேமநலநிதி மற்றும் பல்வகை வழிவகைச் சட்டம் 1952 ஆனது இவ்வறிவிக்கை பிரசுரிக்கப்பட்ட நாளில் ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் 20 மற்றும் அதற்கு கூடுதலாக பணிபுரியும் பணியாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தும் என்றும் அதன்படி திருநெல்வேலி மாநகராட்சியானது இச்சட்டத்தின் கீழ் 8.1.2011 முதல் கொண்டு வரப்பட்டு தொழிலாளர் சேமநல நிதி 12%, மாநகராட்சி பங்குத்தொகை 12% சேர்த்து செலுத்துமாறு இம்மாநகராட்சிக்கென சேமநலநிதி குறியீடு எண் TN/89230 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் தொழிலாளர் சேமநல நிதி தொகையினை தொழிலாளர் சேமநல நிதி அலுவலகத்தில் உரியகாலத்தில் செலுத்தி e-filing செய்ய சேமநலநிதி அலுவலகத்தால் சட்டப்படியாக எடுக்கப்படும் நடவடிக்கையினை தவிர்த்திடும் பொருட்டு பொருளில் கண்ட விபரங்களின் அடிப்படையில; EPF ஆலோசகராக ஷேரன் கன்சல்டென்சி, திருநெல்வேலி நிறுவனத்தை நியமிக்கவும் மேற்படி சேவைகளை மேற்கொள்ள, மேற்கண்டுள்ள விலைப்புள்ளிகளின்படி கணனி அறிக்கை தயாரிப்பதற்கு ஒரு பணியாளருக்கு ரூ.15/- வீதம் 765 பணியாளர்களுக்கு ரூ.11475/-, சேமநலநிதி திட்டத்தின் கீழ் கொண்டு வர ஒரு பணியாளருக்கு ரூ.25/- வீதம்

765 பணியாளர்களுக்கு ரூ.19125/- மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிக்கு கணக்கு எண் 89230-ஐ இன்றைய தினத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.9500/- ஆக மொத்தம் ரூ.40100/- எனவும், இது தவிர்த்து பணியாளர்களின் வருகை பதிவை Online மூலம் பதிவு செய்வதற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.12500/- வீதம் ஷேரன் கன்சல்டென்சி, திருநெல்வேலி நிறுவனத்திற்கு செலுத்தவும், மேலும் இம்மாநகராட்சியில் EPF ஆலோசகராக ஷேரன் கன்சல்டென்சி, திருநெல்வேலி நிறுவனத்தை நியமிக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 241

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(கோப்பு எண் சி3/5031/2012 (மை.அ.)

---

32) திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் (2016-17) திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டம் (பகுதி-2) (Phase-II) செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2) நாள் 25.10.2017 வாயிலாக ரூ.289.01 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ.289.01 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள்படி ரூ.296.11 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.296.11 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் கடன் தொகை ரூ.60.18 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP– Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். TNUDF/Projects/Tirunelveli UGSS/ Phase–II நாள் 01/03/2019 கடிதத்தின் மூலம் புதை வடிகால் திட்டம் பகுதி-2-க்கான கடன் ஒப்புதல் வழங்கப்பட்டதனை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1) Amount of Loan : Rs.60.18 (Rupees Sixty crores and eighteen lakhs only)
2) Project : Under Ground Sewerage Scheme in Tirunelveli Corporation Phase-II
3) Project Cost : Rs.296.11 Crores
4) Rate of Interest : 9.10 %
5) Repayment Period : 20 years
6) Financing Plan

| Sl.No. | Mean of Finance | Amount (Rs.In Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP (T-1) | 60.18 | 20.32% |
| 2 | Grant from Government of India under AMRUT | 144.51 | 48.80% |
| 3 | Grant from Government of Tamil Nadu under AMRUT | 57.80 | 19.52% |
| 5 | ULB Contribution | 33.62 | 11.36% |
| | Total | 296.11 | 100.00% |

7) Completion Period:
The proposed Project should be completed within three years from the date of commencement of project

8) Last date of withdrawal
The Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement

9) Special terms &conditions :

a. Procurement Guidelines
The Corporation shall adhere to the provisions of the ADB Procurement Guidelines. The Corporation shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure

b. Tirunelveli Corporaiton Contribution
The Corporation shall contribute an amount equivalent to 11.36% of Project Cost amounting to Rs.33.62 Crores (Rupees Thirty three crores sixty two lakhs only) as own contribution during the construction period.

c. House Service Connection Deposit & User Charges (Tariff):
(i) The Corporation shall levy and collect from the beneficiary(ies) the following:

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit (Rs.) | | Proposed Tariff (Rs. Per Month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Domestic | Non-Domestic |
| < 500 | 7500 | 15000 | 100 | 300 |
| 501-1200 | 10000 | 20000 | 120 | 360 |
| 1201 -2400 | 12500 | 25000 | 140 | 420 |
| 2401* | 15000* | 30000* | 160* | 480* |
| Wt. Average | 8676 | 17354 | 109 | 328 |
| * This is the base rate for the plinth area of 240l sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. have to be increased in proportion to the increase in plinth area | | | | |

The Corporation shall increase the house service connection deposit & user charges (tariff) by a minimum of 10% of the base rate on completion of first five years of operation and a minimum of 10% of the prevailing rate thereafter once in every five years.

d. The Corporation shall open a separate "Project Account" for the sub-project assisted under TNUFIP in the Books of Accounts of the Corporation.

e. The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under TNUFIP separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2019. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

f. Operation & Maintenance
The Corporation shall operate sustainably, maintain the Project assets in a good working condition and meet the operation & maintenance cost from the user charges collected from the beneficiary(ies)

g. Loan from others

The Corporation shall not avail any fresh loans for this Project from banks, institutions or any other agency during the tenure of the Loan without obtaining prior written approval from the TNUIFSL

h. Environmental & Social Management Framework :

The Corporation shall implement the Project according to the Environmental Assessment & Review Framework (EARF) and Resettlement Framework (RF) developed by TNUIFSL.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் தெரிவித்துள்ளவாறு அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ன்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.296.11 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் கடன் தொகை ரூ.60.18 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். TNUDF/Projects/Tirunelveli UGSS/ Phase–II நாள் 01/03/2019 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு தொகை ரூ.60.18கோடி கடன் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் கடன் ஒப்பந்த பத்திரம் மற்றும் Tripartite Agreement-ல் தெரிவித்த நிபந்தனைகளை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்

தீர்மானம் எண் 242

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

பி3/5915/2018

---

33) திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ருத் (2016-17) திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டம் (பகுதி-3) (Phase-III) செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண்.5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 22.01.2018 வாயிலாக ரூ.381.86 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ.440.19 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள்படி ரூ.447.75 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.447.75 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் மானியமாக தொகை ரூ.92.30 கோடியினை Project Suctainability Grant Fund (PSGF) ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். PSGF/Projects/Tirunelveli UGSS/ Phase–III நாள் 01/03/2019 கடிதத்தின் மூலம் புதை வடிகால் திட்டம் பகுதி-3-க்கான மானியம் ஒப்புதல் வழங்கப்பட்டதனை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. Amount of Grant : Rs.92.30 (Rupees Ninety Two Crores and Thirty lakhs only)
2. Project : Implementation of Under Ground Sewerage Scheme in Tirunelveli Corporation
3. Project Cost : Rs.447.75 Crores
4. Financing Plan

| Sl.No | Mean of Finance | Amount (Rs.In Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP (T-1) | 37.28 | 8.33% |
| 2 | Grant from Government of India under AMRUT | 190.93 | 42.64% |
| 3 | Grant from Government of Tamil Nadu under AMRUT | 76.37 | 17.06% |
| 4 | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under ADB assisted TNUIFIP (T-1) | 92.30 | 20.61% |
| 5 | ULB Contribution | 50.87 | 11.36% |
| | **Total** | 447.75 | 100.00% |

5) Completion Period: The proposed Project should be completed within three years from the date of commencement of project

6) Last date of withdrawal: Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of acceptance of Grant terms & conditions.

7) Special terms & conditions:

a) Procurement Guidelines: The Corporation shall adhere to the provisions of the ADB Procurement Guidelines. The Corporation shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

b) The Corporation shall open a separate “Project Account” for the sub-project assisted under TNUFIP in the Books of Accounts of the Corporation.

c) The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under TNUFIP separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31‘' March every year. The first year Project Accounts shall be closed on 31% March 2019. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

d) Statement of Expenditure & Progress Reports
The Corporation shall provide monthly Progress Reports and Statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

e) Environmental & Social Management Framework:
The Corporation shall implement the Project according to the Environmental Assessment & Review Framework (EARF) and Resettlement Framework (RF) developed by TNUIFSL.

அலுவலகக்குறிப்பு :

பொருளில் தெரிவித்துள்ளவாறு அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ன்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.447.75 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் மானியமாக தொகை ரூ.92.30 கோடியினை Project Sustainability Grant Fund (PSGF) ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். PSGF/Projects/Tirunelveli UGSS/ Phase–III நாள் 01/03/2019 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு தொகை ரூ.92.30கோடி மானியம் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 243

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(பி3/5915/2018)

---

34) திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் (2016-17) திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டம் (பகுதி-3) (Phase-III) செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண்.5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 22.01.2018 வாயிலாக ரூ.381.86 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ.440.19 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள்படி ரூ.447.75 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.447.75 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் கடன் தொகை ரூ.37.28 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். TNUDF/Projects/Tirunelveli UGSS/ Phase–III நாள் 01/03/2019 கடிதத்தின் மூலம் புதை வடிகால் திட்டம் பகுதி-3-க்கான கடன் ஒப்புதல் வழங்கப்பட்டதனை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. Amount of Loan : Rs.37.28 Crores (Rupees Thirty Seven Crores and Twenty eight lakhs only)
2. Project : Under Ground Sewerage Scheme in Tirunelveli Corporation Phase-III
3. Project Cost : Rs.447.75 Crores
4. Rate of Interest : 9.10 %
5. Repayment Period : 20 years
6. Financing Plan

| Sl.No | Mean of Finance | Amount (Rs.In Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP (T-1) | 37.28 | 8.33% |
| 2 | Grant from Government of India under AMRUT | 190.93 | 42.64% |
| 3 | Grant from Government of Tamil Nadu under AMRUT | 76.37 | 17.06% |
| 4 | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under ADB assisted TNUIFIP (T-1) | 92.30 | 20.61% |

| | | | |
|---|---|---|---|
| 5 | ULB Contribution | 50.87 | 11.36% |
| | Total | 447.75 | 100.00% |

7. Completion Period:
   The proposed Project should be completed within three years from the date of commencement of project

8. Last date of withdrawal
   The Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement

9. Special terms &conditions :
   a. Procurement Guidelines
      The Corporation shall adhere to the provisions of the ADB Procurement Guidelines. The Corporation shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure

   b. Tirunelveli Corporaiton Contribution
      The Corporation shall contribute an amount equivalent to 11.36% of Project Cost amounting to Rs.50.87 Crores (Rupees Fifty Crores and Eighty Seven Lakhs only) as own contribution during the construction period.

   c. House Service Connection Deposit & User Charges (Tariff):
      (i) The Corporation shall levy and collect from the beneficiary(ies) the following:

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit (Rs.) | | Proposed Tariff (Rs. Per Month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Domestic | Non-Domestic |
| < 500 | 7500 | 15000 | 100 | 300 |
| 501-1200 | 10000 | 20000 | 120 | 360 |
| 1201 -2400 | 12500 | 25000 | 140 | 420 |
| 2401* | 15000* | 30000* | 160* | 480* |
| Wt. Average | 9268 | 18537 | 114 | 342 |
| * This is the base rate for the plinth area of 240 lsq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. have to be increased in proportion to the increase in plinth area | | | | |

      The Corporation shall increase the house service connection deposit & user charges (tariff) by a minimum of 10% of the base rate on completion of first five years of operation and a minimum of 10% of the prevailing rate thereafter once in every five years.

   d. The Corporation shall open a separate “Project Account” for the sub-project assisted under TNUFIP in the Books of Accounts of the Corporation.

   e. The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under TNUFIP separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2019. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to

the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

f. Operation & Maintenance
The Corporation shall operate sustainably, maintain the Project assets in a good working condition and meet the operation & maintenance cost from the user charges collected from the beneficiary(ies)

g. Loan from others
The Corporation shall not avail any fresh loans for this Project from banks, institutions or any other agency during the tenure of the Loan without obtaining prior written approval from the TNUIFSL

Environmental & Social Management Framework :

h. The Corporation shall implement the Project according to the Environmental Assessment & Review Framework (EARF) and Resettlement Framework (RF) developed by TNUIFSL.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் தெரிவித்துள்ளவாறு அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019-ன்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.447.75 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் கடன் தொகை ரூ.37.28 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். TNUDF/Projects/Tirunelveli UGSS/ Phase–III நாள் 01/03/2019 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு தொகை ரூ.37.28 கோடி கடன் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் கடன் ஒப்பந்த பத்திரம் மற்றும் Tripartite Agreement-ல் தெரிவித்த நிபந்தனைகளை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

தீர்மானம் எண் 244

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(பி3/5915/2018)

---